Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 28 (06.06.2005) திங்கட்கிழமை இதழ்:250




## மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் சுட்டுக் கொலை!

### ஆனைக்கோட்டை பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டை- மூத்த விநாயகர் கோவிலடியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்துக்குப் பின் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இளைய தம்பி அசோகன் (வயது 30) என்ற இளைஞரே கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

ட்ரெயில் ரக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞனை இன்னொரு மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் பிரஸ்தாப இளைஞர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்திய மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் - இறந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் அவரின் உறவினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை - சம்பூரிலும் புலிகள் ஓடுபாதை அமைக்கின்றனராம்!

### 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது

கொழும்பு —

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூர் பகுதியில் - விமான ஓடுபாதை ஒன்றை அமைக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பதாக இராணுவப் புலனாய்வுத்துறை, அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருகோணமலையின் தெற்குப் பகுதியிலுள்ள சம்பூர் - தகரவாடியில் 25 ஏக்கர் பரப்பளவில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, பெரும் எண்ணிக்கையான சிமெந்து பைக்கற்றுக்கள் அடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைவிடமானது திருகோணமலை துறைமுகத்தை நோக்கியதாக உள்ளது.

இது திருகோணமலையில் விடுதலைப் புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### போராளிகளுக்கான பயண ஒழுங்குகளை செய்யாவிடின்

# புலிகளின் ராணுவப் பாதுகாப்புடன் பயணத்தை மேற்கொள்ள நேரிடும்!

### அரசுக்கு புலிகள் எச்சரிக்கை

கொழும்பு —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகளின் போக்குவரத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள இராணுவத்தினர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்தால், தமது இராணுவப் பாதுகாப்புடன் பயணத்தைத் தொடர நேரிடும் என்று விடுதலைப் புலிகள் அரசுக்கு எச்சரித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளை மேற்கொண்டு வரும் போராளிகள் தலைமைப்பீடத்தின் ஆலோசனைகளுக்காகச் சென்று வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளையும், பாதுகாப்பையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக விடுதலைப்புலிகள் இயக்கம் அண்மையில் கோரியிருந்தது.

ஆனால், இதற்கு உரிய பதில் அளிக்காமல் இழுத்தடிப்புச் செய்வது என்ற பேரில் எந்தக் கோரிக்கையையும் இரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் இளைஞர்கள் இருவர் கொழும்பில் சுட்டுக் கொலை!

கொழும்பு —

வரர் கோயிலுக்கு முன்பாக பஸ் நிறுத்

## எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிப்பு!

கொழும்பு —

## புரிந்துணர்வு உடன்பாட்டினாலேயே படை அதிகாரிகள் பலியாகின்றனர்!

# குருநகர் இளைஞர்கள் இருவர் கொழும்பில் சுட்டுக் கொலை!

கொழும்பு —

யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் நேற்று அதிகாலை கொழும்பில் வைத்து அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கொழும்பு - கோட்டையிலிருந்து மட்டக்குளி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோதே கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக இவர்கள் சுடப்பட்டனர்.

குறிப்பிட்ட பஸ்ஸைத் தொடர்ந்து ஓட்டோ ஒன்றில் வந்த இரண்டு இளைஞர்களே பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக பஸ் நிறுத்தப்பட்டபோது அதற்குள் ஏறி குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் வெளியே இழுத்துச் சுட்டுக்கொன்றனர்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரு பெண்கள் விசாரணைகளுக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்து 4 அடையாள அட்டைகள், 5000 ரூபா பணம், உடுப்புப் பொதிகள் மற்றும் இரண்டு செல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாகுழுவின் முக்கியஸ்தர் ரிதிதென்னவில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - பொலனறுவ மாவட்ட எல்லைப்புறத்திலுள்ள ரிதிதென்னவில் கருணாகுழுவைச் சேர்ந்த முக்கியஸ்தரான மருதமேனன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் - நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே மருதமேனன் என்ற களுதாவளையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுரேஸ் (வயது-21) என்பவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - வாழைச் சேனை பிரதேசத்திலுள்ள மறைவிடத்திலிருந்து கருணா குழுவைச்சேர்ந்த 4 பேர் பிக்கப் வாகனத்தில் பொலனறுவ நோக்கி பயணம் செய்தனர்.

இப்பயணத்தின்போது தேனீர் கடையொன்றில் தேனீர் அருந்துவதற்காக வாகனம் நிறுத்தப்பட்டது. அப்போது அங்கு வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் இந்தக் குழு மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

கருணா குழுவினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்ட மருதமேனனின் சடலம் வாழைச்சேனை பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

# எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிப்பு!

கொழும்பு —

எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் நேற்று நள்ளிரவு முதல் அதிகரித் துள்ளது.

இதன்படி பெற்றோலின் விலை 6 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் டீசலின் விலை 4 ரூபாவாலும் , மண்ணெண்ணெய் 2 ரூபாவாலும், ஓயில் 2 ரூபாவாலும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

# கடற்படைத் தளபதி இந்தியா பயணம்!

கொழும்பு —

கூட்டுப்படைத் தளபதியும் கடற்படைத் தளபதியுமான - வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஒரு வாரகால விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார்.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுசில் குமாரின் அழைப்பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சார்புக் கட்சியினரே சிவராமை கொன்றனராம்!

## ஆங்கில வார இதழ் தகவல்


கொழும்பு —

ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பொலிஸார் கண்டறிந்துள்ளதாகவும் - அரசு சார்புக் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்களே இந்தக் கொலையை மேற்கொண்டதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு உடன்பாட்டினாலேயே படை அதிகாரிகள் பலியாகின்றனர்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி



கொழும்பு —

ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப் புலிகளுடன் இணைந்து தவறான வழியில் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினாலேயே படையதிகாரிகள் தமது உயிர்களைப் பறிகொடுக்க வேண்டியேற்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களை எதிர்த்துக் குரல் கொடுப்போரை இனவாதிகளாக பட்டியலிட சிலர் முயற்சிக்கின்றனர். இத்தகைய சம்பவங்களை ஆதரிப்போரை நாம் துரோகிகளென அழைக்கவேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தலதாமாளிகையிலிருந்து யாத்திரை!

## ஹெல உறுமய இன்று ஆரம்பிக்கிறது

கொழும்பு —

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான யாத்திரை ஒன்றை இன்று கண்டி தலதா மாளிகையில் இருந்து ஜாதிக ஹெல உறுமய ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அருகில் நடைபெற்ற சமய நிகழ்வுகளை அடுத்தே இந்த யாத்திரை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதேரர் கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டில் தற்போது பதற்றமான நிலை தோன்றியுள்ளது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் தெளிவில்லாத நிலை தோன்றியுள்ளது. எந்தவொரு பொறுப்புவாய்ந்த அமைச்சர்களும் அறிக்கை எதுவும் விடுவதில்லை.

விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி ஒருதலைப் பட்சமாக எந்த முடிவுக்கும் செல்லமுடியாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்குரிய இணக்கப்பாட்டிற்கான கருத்தை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

அவ்வாறு ஜனாதிபதி செய்யாதுவிடின் உயிரைப் பணயம் வைத்து மக்களைத் திரட்டி ஜனாதிபதியைத் தோற்கடிப்போம். இதற்கமையவே இந்த யாத்திரையை ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# வாழ்நாள் பேராசிரியர் சிவஞானசுந்தரத்துக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அனுதாபம்

யழ்ப்பாணம்—

பன்முக ஆளுமை கொண்ட அறிஞர் ஒருவரை தமிழ்ச் சமூகம் இழந்துவிட்டது.

அறிவியல், இலக்கியம், நிர்வாகம்... எதைப்பற்றியெனினும் எளிமையான, இலகுவான சொற்களைக் கையாண்டு எழுதியவர், பேசியவர், விரிவுரைகளை நிகழ்த்தியவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம்.

இவ்வாறு வாழ்நாள் பேராசிரியர் சிவஞானசுந்தரத்தின் மறைவையொட்டி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மருத்துவபீடத்தில் பணி ஒய்வு பெற்று ஒரு தசாப்தம் கடந்துவிட்டது. ஓய்வின் பின் மேலும் விகசித்தார். மருத்துவ பீடத்தின் பிதாமகரானார். கற்பித்தலைத் தொடர்ந்தார். அவரைத் தொடர்ந்த பீடாதிபதிகளுக்கு மூத்த ஆலோசகரானார். சிக்கல்கள் எழுந்தபோதெல்லாம் பக்கம் சாராது சிக்கல் தீர வழிகாட்டினார்.

இடப்பெயர்வின் பின்னான மீளமர்வின் பின் பல்கலைக்கழகத்தையும், மருத்துவபீடத்தையும் மீள இயல்பாக்கத் தனது ஒத்துழைப்பை நல்கியவர். 1990களின் இறுதியில் நிகழ்ந்த மாணவர் எழுச்சிக்கு தனது ஆதரவைத் தந்தவர். இதே காலகட்டத்தில் ஊழியர் சங்கத்துடன் நெருக்கமானார். நல்ல செயல்களென தாம் கருதியவற்றை வலியச் சென்று பாராட்டும் பண்பாளர்.

அன்னாரின் இழப்பு போர் அனர்த்த கால வீழ்ச்சியினின்று மீளெழும்ப முயன்று கொண்டிருக்கும் மருத்துவபீடத்துக்கு இக்கால கட்டத்தில் பேரிழப்பாகும்.

மலையகத்திலும், யாழ்ப்பாணத்திலும் அன்னார் ஆற்றிய பன்முகப் பணிகள்அவரை என்றென்றும் நினைவில் நிறுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கண்ணீர் அஞ்சலி

04-06-2005 அன்று இறைபதமடைந்த யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும், மூத்த எழுத்தாளரும், சமூக மருத்துவத்துறை நிபுணருமான

### எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி)

அவர்களின் மறைவு குறித்து எமது துயரங்களை அன்னாரின் குடும்பத்தினருடனும் அனைத்து தமிழ் உறவுகளுடனும் பகிர்ந்து கொள்வதுடன் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குகின்றோம்.

– சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

(1189)


# நந்திக்கு ரவிராஜ் அனுதாபம்

பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) மறைவு தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நந்தி எனும் புனைபெயரில் எழுத்துலகில் கால்பதித்து இலக்கியத் தொண்டாற்றிய மகான் இவர். சிறந்த விமர்சகராகவும், சிறந்த பேச்சாளராகவும், நூல்களை ஆய்வு செய்பவராகவும் திகழ்ந்து தமிழுக்காற்றிய தொண்டானது மகத்துவமானது.

ஆரம்பத்தில் சமூக மருத்துவத்துறையில் பேராசிரியராக பணியாற்றிய அமரர்- பிற்காலத்தில் மருத்துவ பீடாதிபதியாக நீண்ட காலம் பணியாற்றியவர். ஏராளமான புத்திஜீவிகளையும், வைத்தியர்களையும் எமது தேசத்திற்கு உருவாக்கிய பெருமைக்குரியவர். இலக்கியத்தோடும், வைத்தியத்துறையிலும், பல்கலைக்கழக வளர்ச்சியுடனும், எமது தேசியத்தின்பாலும் அன்புணர்வு கொண்டு செயற்பட்டவர் என்பது மறக்கமுடியாத உண்மை. சத்தியசாயி அமைப்பின் மூலம் மக்களுக்குப் பெரும் தொண்டாற்றி மறைந்த மாமேதை நந்தி, தமிழ் பேசும் மக்களால் மறக்கமுடியாத ஒருவரென்பது உண்மை.

# பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருந்த ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் ஓவியக்கண்காட்சியும், கருத்துப் பகிர்வு நிகழ்வும் இன்று நடைபெற மாட்டாது எனவும் அந்நிகழ்வு நாளை நடைபெறுமெனவும் சர்வ தேச தமிழீழ மாணவர் பேரவை அறிவித்துள்ளது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தகங்கள். ஒரு தடவை மட்டுமே வாசித்த பின்வரும் புத்தகங்கள்.

ISLAND OF BLOOD -750.00, ETHNIC CONFLICT AND IPKF- 1150.00, GOD OF SMALL THINGS- 950.00, SRILANKA AT CROSS ROADS - 650.00. S.P. KRISHNAN, 17, PERINPA NAYAGAM LANE, JAFFNA.

(1177)

## 'வரதர் வெளியீடு'

### எழுத்தாளர்களை அழைக்கிறது!

- 'இன்றைய இளைஞர்களின் நாளைய வாழ்வுக்காக' என்ற நோக்கத்தோடு பலசிறிய நூல்கள் வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.
- இந்த நூல்களைப் படிப்பதனால் இளைஞர்களின் பொது அறிவு வளர்வதோடு. முக்கியமாகத் தாங்களும் எதிர்காலத்தில் நல்ல பல சாதனைகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் உள்ளங்களில் துளிர்க்க வேண்டும். தாங்களும் ஒழுக்க சீலர்களாக கற்றறிந்த சான்றோர்களாக. எல்லோரும் போற்றும் படியாக வாழவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.
- உதாரணமாக - வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து தமது விடாமுயற்சியினாலும். திறமையினாலும் உச்ச நிலைக்கு வந்த சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கி எழுதலாம் (வசனநடை வாசகரை ஈர்க்கவேண்டும்)
- சாதாரண புத்தக அளவில் 25 பக்கங்களுக்கு எழுதினால் போதுமானது.
- வெளியிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கட்டுரைக்கும் அதன் முதல் பதிப்பிற்காக மட்டும் 1,000/= சன்மானம் வழங்கப்படும்.
- கட்டுரையின் மூலப்பிரதிகளை வைத்துக்கொண்டு. பிரதிகளை மட்டும் எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் கட்டுரை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் - அது வெளியீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்களுக்கு அறிவிப்போம்.

வரதர் வெளியீடு: 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 222 2820) அல்லது 84/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் . (தொலைபேசி: 222 6164)

(C/4187)

நாகஜீவ யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

3 ஆவது வெற்றி வாரமாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும்

காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த

சூர்யா



ஆக்ஷன் படம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

மனோகரா யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா,ரகுமான் மற்றும் பலர் நடித்த

ராம்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்



சந்திரமுகி

54 ஆவது நாளாக கடைசி வாரம்

காட்சி நேரம் :- (பு.நே) 11.00, 3.00,7.00,

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், தேவயானி,நெப்போலியன் நடித்த

தென்காசிப்பட்டணம்

பஸ் போக்குவரத்துபாதை இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

### Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL-(DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER

2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com



## ஓவியர் புகழேந்தியின்

# புயலின் நிறங்கள்



## ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும்

அமரர் பேராசிரியர் நந்தி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 06-06-2005 ஆம் திகதி நடைபெறவிருந்த கண்காட்சி நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டு ,

நாளை 07-06-2005 (செவ்வாய்க்கிழமை) மட்டும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 08-06-2005 அன்று வடமராட்சியிலும், 09-06-2005 ஆம் திகதி தென்மராட்சியிலும் நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச மாணவர் பேரவையினரும்,
நுண்கலைக் கல்லூரியினரும்.

# சந்திரிகாவின் விருந்தில் மிலிந்த; ஐ.தே.கவுக்குள் புதிய சர்ச்சை!



கொழும்பு ———

கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறான வகையில் - முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய இரவு விருந்தில் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட பங்கேற்றமை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த இரவு விருந்திற்கு விடுத்திருந்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்க முடிவு செய்திருந்தது. ஆனால், இதை ஏற்காமல் மிலிந்த மொறகொட விருந்தில் கலந்துகொண்டது அவரது கட்சிக்குள் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கட்சியின் செயற்திட்டப்படி நடக்காமல் அவரது சொந்த விருப்பிலேயே மிலிந்த செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துணைத் தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பை நிரா கரித்திருந்தனர். இந்த விருந்தில் பங்கேற்காத ரணில், கொழும்பில் தங்கியிருக்காமல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகச் சென்றுவிட்டார்.

மொறகொட மற்றும் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியானதையடுத்தே ஐ.தே.கவுக்குள் சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

இந்த விருந்திற்கு முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா, மிலிந்த மொறகொடவைத் தொடர்பு கொண்டதாகவும், சிறையில் இருக்கும் எஸ்.பி.திசநாயக்கா விடயம் தொடர்பாக ஆலோசனை நடத்த வருமாறு அவர் அழைத்ததாகவும் கூறப்பட்ட போதும் அதை மொறகொட தரப்பு மறுத்துள்ளது.

அதேநேரத்தில் இந்த விருந்தில் பங்கேற்பதற்காகவே தனது துருக்கி பயணத்தை மிலிந்த மொறகொட மாற்றி அமைத்ததாக மிலிந்த தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# பொதுக்கட்டமைப்பை உருவாக்க விசேட சட்டம் தேவையில்லை

## அமைச்சர் டியு குணசேகர தெரிவிப்பு



கொழும்பு ———


பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் யாப்பில் திருத்தம் செய்யவோ, விசேட சட்டம் எதையும் கொண்டு வரவோ வேண்டிய தேவை எதுவும் கிடையாது என அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு நிர்வாக அலகு. அது அதிகாரிகள் அளவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதில் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த பொதுக்கட்டமைப்பு வரையறைகளுக்குள்ளான ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் செயற்படும். நாடாளுமன்ற உறுப்பினரின் கையெழுத்துடன் கூட இந்தப் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தலாம்.

அனைத்து சமூக மக்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தும் ஜனாதிபதியின் முடிவை ஆதரிக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவி செய்யக் கூடிய பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பதன் மூலம் பிரிவினைவாதம் தான் வலிமையடையும். வரலாறு இதை நிரூபித்து இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு நகர பாதுகாப்பு விசேட அதிரடிப்படை வசம்!



கொழும்பு ———

கொழும்பு நகரில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருத்திற்கொண்டு, நகரின் பாதுகாப்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையை (எஸ்.ரி.எவ்.) ஈடுபடுத்துவதெனத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி நிமால் லியூக்குடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பு மற்றும் களுத் துறை விசேட அதிரடிப்படை பயிற்சி நிலையங்களிலுள்ள படையினரை இந்தப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் விசேட மோட்டார் சைக்கிள் படைப் பிரிவையும் கொழும்பு நகரின் பாதுகாப்பில் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கொழும்பு நகரின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விசேட அதிரடிப்படையின் உளவுப்பிரிவும் தற்போது புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு நகரின் பாது காப்புக்காக 19 பொலிஸ் நிலையங்களின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்துள்ள வீதிகள், பாலங்கள், குறுக்கு வீதிகள் உட்பட 50 இடங்களை - சுற்றிவளைக்கும் வகையில் ஆயுதம் தரித்த பொலிஸாரை பணியில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொலிஸ் குழுக்களுக்கு தகவல் பரிமாற்றக் கருவிகளும் வழங்கப்படவுள்ளன. (தே)

## பொதுக்கட்டமைப்புக் குறித்து

# கூட்டணிக் கட்சிகளுடன் பிரதமர் ஆலோசனை!



கொழும்பு ———

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான ஆளும் கூட்டணியில் இடம் பெற்றிருக்கும்கட்சிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்கான முயற்சியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஈடுபடவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் சிரேஸ்ட உறுப்பினர்கள் சிலர் விடுத்த வேண்டுகோளுக்கமையவே கட்சித் தலைவர்களைச் சந்திக்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திட்டால் அடுத்தகணமே ஜே.வி.பி - அரசாங்கத்தை விட்டு வெளியேறும் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையிலேயே கூட்டணித் தலைவர்களை பிரதமர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

# 38 பொலிஸ் அதிகாரிகளை தற்காலிகமாக பதவி நீக்குக!

## பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை

கொழும்பு ———

அதிகார துஸ்பிரயோகம், சித்திரவதை முறைகேடுகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் தொடர்புடைய 38 பொலிஸ் அதிகாரிகளை தற் காலிகமாக பதவி நீக்கம் செய்யுமாறும், 50 பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறும் - தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைத்த முறைப்பாடுகளை விசாரணை செய்த பின்னரே ஆணைக்குழு இந்தப் பரிந்துரையை செய்துள்ளதாக ஆணைக்குழுவின் பொதுமக் கள் முறைப்பாடு பிரிவின் ஆலோசகரான ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் அன்டன் ஜெயநாதன் தெரிவித்தார்.

பதவி நீக்கம் மற்றும் இடம் மாற்றத் துக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களுள் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள், சார்ஜன்ட் கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் அடங்குவதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக இந்த வருடத்தின் முதல்மூன்று மாதகாலப் பகுதிக்குள் 664 முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளதாக ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. இந்த முறைப்பாடுகளில் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக 197 முறைப்பாடுகள் பதிவாகியுள் ளன.

இதுதவிர பொலிஸில் செய்த முறைப்பாடுகள் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்காமை குறித்த 197 முறைப்பாடுகளும், பக்கச்சார்பாக செயற்பட்டமை குறித்த 99 முறைப்பாடுகளும், ஊழல் செய்ததாக 53 முறைப்பாடுகளும், சித்திரவதை செய்தமை தொடர்பாக 14 முறைப்பாடுகளும் இந்த ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை பாதுகாப்பு குறித்து சந்தகிரி ஆலோசனை!



திருகோணமலை ———

கூட்டுப்படைகளின் தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ்அட்மிரல் தயா சந்தகிரி - திருகோணமலைக்கு விஜயம் செய்து பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாக ஆலோசனைகளை நடத்தினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது, திருகோணமலைக்கு வருகைதந்த வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - நகரின் பாதுகாப்புத் தொடர்பாக முப்படைகளின் சிரேஷ்ட தளபதிகளுடனும், பொலிஸ் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினார்.

திருகோணமலை நகரம், மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாக தயாசந்தகிரி படைத்தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திருகோணமலை கடற்படைத்தளத்தில் புதிய இறங்குதுறை ஒன்றை கூட்டுப்படைகளின் தளபதியும், கடற்படைத்தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்று முன்தினம் திறந்துவைத்தார்.

அத்துடன், திருகோணமலை கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடித்து வெளியேறும் அதிகாரிகளுக்கான சான்றிதழ்களையும் அவர் வழங்கினார்.

லெப்டினன்ட் தரத்தைசேர்ந்த 20 கடற்படைஅதிகாரிகள் இங்கு பயிற்சி முடித்து வெளியேறியுள்ளனர். இந்தநிகழ்வில் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பியுடன் இந்தவாரம் ஜனாதிபதி ஆலோசனை!

கொழும்பு ———

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தொடர்பாக ஜே.வி.பி தலைவர்களை ஜனாதிபதிசந்திரிகா இந்த வாரம் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரிய வருகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இந்த விசேட சந்திப்பின்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஜே.வி.பி உறுப்பினர்களைச் சந்தித்து பொதுக்கட்டமைப்பு குறித்து விளக்கமளிப்பார் என அரச வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.


ஜனாதிபதி இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பிய பின்னர் இது பற்றி ஜே.வி.பி க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பின் போது, பொதுக்கட்டமைப்பு குறித்து ஜே.வி.பியினருக்கு ஜனாதிபதி மிகவிரிவான விளக்கத்தை அளிக்க விருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

அத்துடன், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அவர்களுக்கும் விளக்கமளிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் எனவும் கூறப்படுகின்றது.

# முத்தலிப் படுகொலை குறித்து பல கோணங்களில் விசாரணை



கொழும்பு ———

இராணுவ புலனாய்வு அதிகாரி லெப்.கேணல் ரி.என். முத்தலிப் கொலை தொடர்பாக இராணுவத்தினரும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, இந்தக் கொலையுடன் விடுதலைப் புலிகளைவிட வேறு தரப்பினருக்கும் தொடர்பிருக்கலாம் என குற்றப் புலனாய்வுத் துறைத் திணைக்களம் (சி.ஐ.டி) கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


லெப்.கேணல் முத்தலிப்பின் பாதுகாப்பு வெகுவாக அதிகரிக்கப்பட்டிருந்தபோதிலும், சம்பவம் நடைபெற்ற அன்றையதினம் அவருடன், பாதுகாப்பிற்கு எவரும் செல்லாதது குறித்தே இராணுவத் தரப்பினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொலையாளிகள் வந்ததாக கூறப்படும் ரெயில் ரக மோட்டார் சைக்கிளை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

இவர்களால் கடந்த புதன்கிழமை இரவு ஐவர் கைது செய்யப்பட்டனர். இதேநேரம் இந்த கொலையுடன் இரகசிய குழுவொன்றிற்குத் தொடர்பிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

பிந்திய சில தகவல்களின் அடிப்படையில் இந்தக் குழுக்களுக்கு தொடர்பிருப்பதாக கருதும் பொலிஸார் - இது குறித்து விசாரணைகள் நடைபெற்றாலும் இக்கொலையின் சூத்திரதாரிகளௌனக் கருதப்படும் விடுதலைப் புலிகளின் தொடர்புகள் குறித்தும் விசாரணை நடைபெறுவதாக தெரிவித்தனர்.

# பிரைன் லாராவின் அபார ஆட்டம்: இரண்டாவது டெஸ்டிலும் சதம்!



ஜமெக்கா—

பாகிஸ்தான் அணியை 374 ஓட்டங்களுக்குள் மடக்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல்நாள் ஆட்டநேரமுடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 336 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம்நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கிய போது-அப்துல் ரசாக் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் கம்ரன் அக்மல் மட்டுமே சற்றுநேரம் நின்றுபிடித்தார்.

ஷபீர் அகமட் ஓட்டமெதையும் பெறாமலும், கம்ரன் அக்மல் 49 ஓட்டங்களுடனும், கனேரியா 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.


374 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டமிழக்கச் செய்தது.

பந்துவீச்சில் கொலிமோர் 27.3 ஓவர்களில் 78 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும், பவல் 2, கைல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. தொடக்க வீரர் கைல் அதிரடியாக ஆடினார். 22 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை எடுத்த நிலையில் இவர் ஆட்டமிழந்தார்.


பின்னர் ஸ்கோர் 59ஆக இருந்தபோது-சிமித் 25 ஓட்டங்களுடன் அப்துல் ரசாக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.

இவர்களையடுத்து சர்வானுடன் லாரா ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் இணைந்து பாகிஸ்தான் பந்துவீச்சாளர்



களைப் பெரிதும் திணறடித்தனர். ஸ்கோர் 205ஆக உயர்ந்த போது- 137 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த சர்வான், ஷபீர் அகமட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து லாராவுடன் சந்தர் போல் இணைந்துகொண்டார். 74 பந்துகளில் 28 ஓட்டங்




களைப் பெற்றநிலையில் கனேரியாவின் பந்துவீச்சில் சந்தர் போல் ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 275ஆக இருந்தது.

இந்தநிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. லாரா 189 பந்துகளில் 16 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 125 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இது லாராவின் 30ஆவது டெஸ்ட் சதமாகும். இதன்மூலம் அதிக சதமடித்த வீரர்களில் மூன்றாவது இடத்துக்கு லாரா முன்னேறியுள்ளார்.

# கங்கூலியின் துரதிஷ்டம் கவுண்டியிலும் தொடர்கிறது!



லண்டன்—

கவுண்டி கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணித் தலைவர் செளரவ் கங்கூலியின் ஆட்டம் எடுபடவில்லை. மூன்று பந்துகளை எதிர்கொண்டு ஓட்டமெதையும் பெறாமல் டக் அவுட்டானார்.

அவர் இடம்பெற்றுள்ள கிளாமோர்கன் அணி, இங்கிலீஸ் கவுண்டி சம்பியன்ஷிப்பில் விளையாடி வருகிறது.

சுவான்சீ என்னுமிடத்தில் சஸெக்ஸ் அணிக்கு எதிராக 4 நாள் போட்டியில் கங்கூலி அணி பங்கேற்றது.

முதலில் ஆடிய சஸெக்ஸ் அணி 5 விக்கெட்டுக்கு 497 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

அடுத்து ஆடிய கிளாமோர்கன் அணி வெள்ளிக்கிழமை நடைபெற்ற 3ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைச் சேர்த்துள்ளது. பலோ-ஒன்னைத் தவிர்க்க இன்னும் அந்த அணிக்கு 59 ஓட்டங்கள் தேவையாக உள்ளன.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த தொடக்க வீரர் மத்தியூ எலியாட் ஆட்டமிழந்ததும், நடுவரிசை வீரராக கங்கூலி களமிறங்கினார். 3 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு, ஓட்டமெதையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார் அவர். இடதுக்கை வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் லூரி வீசிய பந்தில் கங்கூலி வெளியேறினார்.

டக் அவுட் ஆனது அவருக்கு மட்டுமல்ல, அணிக்கும் பின்னடைவாக அமைந்தது. 2 விக்கெட்டுக்கு 209 ஓட்டங்களைக் குவித்திருந்த கிளாமோர்கன் அணி, கங்கூலி உள்ளிட்ட நடுவரிசை வீரர்களின் ஆட்டமிழப்பால் கடும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

## விளையாட்டு

# தோல்வி காணும் நிலையில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி!



லண்டன்—

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் பங்களாதேஷ் அணி தோல்விகாணும் நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் ஆட்டத் தொடக்கத்



தில் 3 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் விரைவாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

78 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 447 ஓட்டங்களைப் பெற்றநிலையில் முதல் இனிங்ஸ் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இயன் பெல்லின் அபாரமான அதிரடியாட்டத்தினாலும் தோர்ப்பின் இணையாட்டத்தின் மூலமும் இங்கிலாந்து அணியின் ஸ்கோர் விரைவாகவே உயர்ந்தது.

ஆட்டத்தை இடைநிறுத்தும் வரை இவர்கள் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பெல் 168 பந்துகளில் 25 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 162 ஓட்டங்களையும், தோர்ப் 85 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 66 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் மொர்ராசா 2, அப்ரப் அகமட் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து பங்களாதேஷ் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. முதல் இனிங்ஸில் விரைவாகவே ஆட்டமிழந்த பங்களாதேஷ் வீரர்கள் இரண்டாம் இனிங்ஸில் ஓரளவுக்கு நின்றுபிடித்தனர்.

ஜாவிட் ஓமர், ஹபிபுல் பசார், அப்ரப் அகமட் ஆகியோர் அரைச் சதத்தைக் கடந்து குறிப்பிடத்தக்க ஓட்டங்களை எடுத்தனர்.

இதனால் 69 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 297 ஓட்டங்களை பங்களாதேஷ் அணி இரண்டாம்நாள் முடிவில் பெற்றது.

ஜாவிட் ஓமர் 108 பந்துகளில்



11 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்களையும், நபீஸ் இக்பால் 15, சாலே 7, அஷ்ரபுல் 12 ஓட்டங்களையும், ஹபிபுல் பசார் 52 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 63 ஓட்டங்களையும், காலித் மசூத் 25, ரபிக் 2, ஹூசேன் மொலீர் 0 ஓட்டத்தையும் எடுத்தனர்.



அப்ரப் அகமட் ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் 11 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 67 ஓட்டங்களுடனும், பாஸ்யா 18 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஹொகாட், பிளின்ரொப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், பற்றி, ஹர்மிசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# மகளிர் பிரிவு கிண்ணத்தை ஹெனின் கைப்பற்றினார்!



பாரிஸ்—

2005ஆம் ஆண்டுக்கான பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ஸ்பெயின் வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின் கைப்பற்றினார்.

அவருக்குப் பரிசாக சுமார் 12 கோடி ரூபா கிடைத்தது.

இரண்டாவது முறையாக ஹெனின் இந்தப் பட்டத்தை வென்றுள்ளார்.

பாரிஸில் சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் பிரான்ஸ் வீராங்கனை மேரிபியர்ஸை 6-1, 6-1 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார் 23 வயதாகும் ஹெனின்.

7மாத இடைவெளிக்குப் பின்பு அவர் கைப்பற்றும் பெரியளவிலான பட்டம் இது. களிமண் தரையில் தொடர்ந்து வெற்றிகாணும் 24ஆவது ஆட்டமாக ஹெனினுக்கு இது அமைந்தது.

தோல்வியுற்ற பியர்ஸ், தனது தட்டையான பந்து திருப்புதல் நுணுக்கத்தால் இதற்கு முந்தைய 2 ஆட்டங்களில் அபார வெற்றி பெற்றார். ஆனால் ஹெனினுக்கு எதிராக அதேமாதிரியாக மேற்கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியில் முடிந்தன.

தரநிலையில் 21ஆவது இடத்தில் உள்ள பியர்ஸ், வேரா சுவனரேவா (11ஆவது நிலை), பட்டி ஷின்டர் (10ஆவது நிலை), லின்ட்சே டேவன்போர்ட் (முதல் நிலை), எலீனா லிகோட்சேவா (19ஆவது நிலை) ஆகியோரை முந்தைய சுற்றுக்களில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

கடுமையாக இருக்குமெனக் கருதப்பட்ட இந்தப் போட்டியில் ஹெனின் மிகச் சுலபமாகவே வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகளிடையே கிங்ஸ்டனில் நடைபெற்று வரும் 2ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியுடன் நடுவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு, ஜமெக்கா கிரிக்கெட் சங்கம் வெள்ளிக்கிழமை வழங்கிய கௌரவ கேடயத்துடன் இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் ஷெப்பேர்ட். நடுவர்களில் மிகவும் மதிக்கப்படும் ஷெப்பேர்ட், கடந்த 20 ஆண்டுகளாக 92 டெஸ்ட் போட்டிகளில் பணியாற்றியுள்ளார்.





முத்தரப்பு, ஆஷஸ் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று முன்தினம் இங்கிலாந்து சென்றனர்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தரப்பு, 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்கான 16 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி வீரர்கள் நேற்றுமுன்தினம் இங்கிலாந்து சென்றனர்.



கலிபோர்னியாவிலுள்ள கார்சனில் 6 வயது சிறுவனுக்கு இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் - லொஸ் ஏஞ்சல்ஸில் தான் தொடங்கியுள்ள உதைபந்து அக்கடமியின் நோக்கங்கள் குறித்து வியாழக்கிழமை நிருபர்களிடம் பேசினார் பெக்காம். அப்போது அடுத்த ஆண்டோ அல்லது அதற்கடுத்த ஆண்டிலோ ஆசியாவில் 2 அக்கடமிகளைத் தொடங்கவுள்ளதாகக் கூறினார். ஏற்கனவே லண்டன் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸில் அவர் அகடமிகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிரந்தர வீடுகளைக் கட்டித் தருமாறு கற்கோவளம் மக்கள் கோரிக்கை!

பருத்தித்துறை—

சுனாமி அனர்த்தத்தினால் கற்கோவளம், புனிதநகர் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வீடுகளின்றி உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் தமக்கு நிரந்தர வீடுகளைக் கட்டித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கற்கோவளம், புனிதநகர் பகுதிகளை ஒன்றிணைத்து கற்கோவளம் பொது மண்டபத்தில் சுனாமி செயற்பாடு தொடர்பான ஒருங்கமைப்புக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கற்கோவளம் கிராம சேவையாளர் எஸ். சண்முகம் (ஜே/406), கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மாதர் சங்கம், விளையாட்டுக் கழகம், கிராம முன்னேற்றச் சங்கம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிரந்தர வீட்டுத் திட்டத்துக்கு கிராம சேவையாளர் ஊடாகக் காணியை உரிமைப்படுத்தும் - காணியின் சொந்த உறுதி கோரப்படுகின்றது.

இந்த நிலையில் அரச காணிகளில் குடியிருத்தப்பட்ட மக்கள் தற்போது காணி உறுதி இன்றி நிரந்தர வீட்டுக் கொடுப்பனவைப் பெறுவதில் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக கொட்டகைகள் இல்லாது உறவினர், வாடகை வீடுகளில் வசித்து வருகின்றபோதிலும் தாம் பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர வீட்டுத் திட்டத்தை வழங்குமாறும் ஒருங்கமைப்புக் கூட்டத்தில் இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# ஐஸ்பழத்தைக் காட்டி சிறுவனின் நகைகளைப் பறிக்க முயற்சி!

கோண்டாவில்—


வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவனிடம் ஐஸ் பழத்தைக்காட்டி வியாபாரி ஒருவர் சிறுவன் அணிந்திருந்த நகைகளைப் பறித்துச் செல்ல முனைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கோண்டாவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்றது.

வீதியோரமாக உள்ள வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை தந்திரமாக அழைத்து ஐஸ்பழத்தைக் காட்டி நகைகளை பறித்துச் செல்ல முற்பட்டபோது -கூட விளையாடிய சிறுவர்களில் ஒருவன் வீட்டுக்குள் இருந்த பெற்றோரிடம் விடயத்தை கூறியபோது வெளியே வந்த பெற்றோரைக் கண்டதும் வியாபாரி தப்பியோடி விட்டதாகக் கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் இடம்பெற்று வருவதால் மக்களை விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (82)

# சைக்கிள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை மேற்கொண்டு வருகின்ற பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்ற மாணவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கட்டம் கட்டமாக துவிச்சக்கர வண்டியை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

அதிலே ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

மாணவி ஒருவருக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த புவி- சைக்கிளை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# தென்னைகளில் பரவும் பீடைத்தாக்கம்; கட்டுப்படுத்தும் முறைபற்றி அறிவிப்பு!

சுதுமலை—

தென்னை மரங்களில் பரவி வரும் 'மயிர்ப்பீடைத் தாக்கம்' தொடர்பான விளக்கங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவேண்டுமாயின் உடனடியாகத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பகுதி தென்னை ஆராய்ச்சி அலுவலர் கேட்டுள்ளார்.

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் தற்பொழுது தென்னைகளில் மயிர்ப்பீடைத் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், அதனை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும் எனவும் - இது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பல இடங்களில் தம்மால் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் -

இந்தத் தாக்கத்தை தாங்களே தனிப்பட்ட முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனவும், அதற்கான செய்முறை விளக்கத்தையும் குறிப்பிட்டார். அதாவது 06 கிராம் மா, 6 கிராம் சவற்காரம், 350 மில்லிலீற்றர் கழிவு ஒயில் என்பவற்றை 100 மில்லிலீற்றர் நீரில் கரைத்து தென்னங் குரும்பைகளில் தெளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பான மேலதிக விளக்கம், விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்த வேண்டுமாயின் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாய சம்மேளனங்கள், கமக்காரர் அமைப்புகள் என்பவற்றைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார். (44)

# மதிப்பீட்டுப் பரீட்சையை ஜூலையில் நடத்த ஏற்பாடு

உடுவில்—

ஆசிரியர்களின் கற்றல் வினைத்திறன், விளைத்திறன்களை ஆராய்ந்து அதிகரிக்கும் வகையில் உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட தரம் 2,3,4,5 ஆகிய ஆரம்ப வகுப்புகளில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சையை ஜூலை இரண்டாம் வாரத்தில் நடத்த கோட்ட அதிபர்கள் நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மதிப்பீடு செய்யவும், கல்வியில் பின்தங்கியுள்ள மாணவரதும், மெல்லக் கற்கும் மாணவரினதும் வகையிலும் திறனை அதிகரிக்கும் முகமாக நடத்தப்படும் இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் கோட்ட அலுவலகத்தால் வழங்கப்படும். இந்த வினாத்தாள்கள் யாவும் பரீட்சையின் பின்னர் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேபோன்றே தரம் 9, 11 ஆகிய வகுப்பு மாணவருக்கும் பகுப்பாய்வுப் பரீட்சை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் தெரிவித்தார். (101)

# நாவாந்துறை வெள்ளவாய்க்கால் புனரமைக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம்—

நாவாந்துறை வெள்ள வாய்க்காலைப் புனரமைப்புச் செய்வதற்கான மதிப்பீட்டை உடனடியாகத் தயாரித்துத் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வ. ரூபினி - வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். காக்கைதீவு பொதுக் கட்டடத்துக்கு அண்மையாக வெள்ள நீர் வழிந்தோடுவதற்காக அனைக்கோட்டை - நாவாந்துறை வீதிக்குக் குறுக்காக அமைந்துள்ள வாய்க்கால்களை யு.என்.டி.பி நிறுவனம் புனரமைக்கவுள்ளது.

எனவே, அவர்களின் இந்தப் புனரமைப்புக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள உதவும் நோக்குடனேயே பிரதேச செயலரால் இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (44)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ்செய்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை 8.15 மணிக்கு வட்டக்கச்சியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சி மத்தியைச் சேர்ந்த 26 வயதுடைய ஜேக்கப் ஜெயராமன் என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். வட்டக்கச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உடுவில் கோட்ட அதிபர்களுக்கு

உடுவில்—

இந்த வருடத்துக்கான பாடசாலை தொகை மதிப்பீட்டு அறிவுறுத்தல் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களும், இந்த விடயத்தை மேற்கொள்ளும் சிரேஷ்ட பொறுப்பாசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அன்று காலை 9 மணிக்கு இந்த ஆண்டுக்கான இதுவரை வழங்கப்படாத பாடநூல்கள் வழங்கப்படும் எனவும், பொறுப்பாசிரியர் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## மகா கும்பாபிஷேகம்

சுதுமலை—

சாவல்கட்டு அந்திக்குழி சாமுண்டாதேவி உடனுறை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காலை 6 மணிக்கு கர்மாரம்பம், விநாயகர் வழிபாட்டு பூசையும், மறுநாள் காலை 6 மணி தொடக்கம் எண்ணெய் காப்பு சாத்துதலும், வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (44)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : அ.டினோஷன்
முகவரி : தேவிபுரம்

அகவை ஆறு



பெயர் : ம.மதுஷனா
முகவரி : கரவெட்டி


# சின்னஞ்சிறு செய்திகள்

## சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

நெல்லியடி—

பொன். சுகந்தனின் 'வெளிச்சம் தேடும் விளக்குகள்' சிறுகதைகள் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழா நிகழ்வில் -

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## புனித அந்தோனியாரின் ஆலய திருவிழா

நெல்லியடி—

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலையும், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. எதிர்வரும் 12 ஆம் திகதி நற்கருணை வழிபாடுகள் விமரிசையாக இடம்பெறும்.

13 ஆம் திகதி திருநாள் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியைத் தொடர்ந்து புனித அந்தோனியாரின் திருச்சுருப பவனியும் சுருப ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன. (13)

## ரீகல் தியேட்டருக்கு அருகில் பல்பொருள் அங்காடி

யாழ்ப்பாணம்—

யாழ். நகரில் ரீகல் தியேட்டருக்கு அருகில் பல்பொருள் அங்காடி கடைகள் அமைப்பதற்கான வேலைகள் யாழ். மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.


ரீகல் தியேட்டருக்கு அருகில் இதற்கென மாநகரசபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்போது கடைகளுக்கான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்.நகரில் இந்த நடைபாதைக் கடைகள் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தற்போது நடைபாதைக் கடைகள் யாழ். முனீஸ்வரன் வீதியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் இல[illegible] வங்கியின் இரண்[illegible] கிளை நடத்தும் நட[illegible]டும் வங்கிச் சேவை இன்று [illegible] 8.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் க.சுப்பிரமணியம் நடமாடும் சேவையினை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.




## கலாசரம்

# செல்லக்கிளி

சிறுகதை

சி.சுதந்திரராஜா



கால்களை மும்முரமாக ஆட்டிக் கொண்டவனை காக்கிச் சட்டைக் காவல்காரன் எழுப்பியபோதுதான் கால்கடுக்க நின்ற செல்லக்கிளிக்கு இருக்க அந்த இடம் கிடைத்தது. எழும்பியவன் நீதிமன்ற வளாக வெளிக்கதவுவரை இழுத்துச் செல்லப்பட்டு வெளியேற்றப்பட்டான். பலருக்கு ஒரு விஷயம் புரிந்தது. நீதிமன்ற அவமதிப்புகளில் காலாட்டியபடி இருக்கிறதும் ஒன்றென்பது பழகிப்போன அவர்களுக்குப் புரிந்து கொண்டாயிற்று. அவ்வளவாக அதுபற்றி அலட்டிக்கொள்ளாமல் வேகா வெக்கைக்குத் தாக்குப்பிடித்தபடி நீதவான் தரிசனமாக நெருக்கியடித்து நின்றிருந்தார்கள்.

இருக்கைகள் எல்லாமே நிரம்பி விட்டது. முதலியார் இலக்கங்களை உச்சரித்தும், எதிராளியும், வழக்காளியும் போட்டா போட்டிபோட்டபடி எதிரெதிர் வழக்காடு கூண்டுக்குள் நுழைந்தார்கள்.

செல்லக்கிளி சோனகக் கலாசார மண்டபத்தின் சிறு வாசிகசாலையில் சில நேரம் வாசிப்பான். கோட்டை வையெம்சீயே கன்ரீன் சுடுநீர் இலவசமாகச் சுடச்சுடப் பருகிக் கொள்ளுவான். சித்தன் போக்கு சிவன் போக்கு போனாலும் இப்படி அபூர்வமாகவே மஜிஸ்ரேட் மன்ற விகாரங்களைப் பார்க்க வருவான். அவனுக்குப் பிடிக்காத அழுக்கேறிய சுவர்களும், அதை ஒட்டிய சுவரின் ஓரத்தின் முட்டிவழியும் கழிப்பறையும் அவனை மறுதடவை அங்கே அழைப்பதாயில்லை.

திருமணம், காதல், குடும்பம் பற்றிய அவனது கனவுகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கிய போதிமரம்போல் நீதிமன்றம் வாய்த்திடும் என்று நினைக்காமலே நடந்தது.

சேறும் சகதியும் நீதிமன்றத்தின் கழிப்பறையை எவருக்கும் எட்டமுடியாத சிக்கலுக்குள் இட்டுவைத்தாலும், குரூரமான மனிதக் கழிப்புகளின் நாற்றம் எல்லோரையும் எட்டிப் பிடிக்கும். இப்போது இவனை ஆக்கிரமிக்கிற சிந்தனை என்னவெனில் ஒரு ஆணின் சிந்தனை பெண்ணாலே ஆக்கிரமிக்கப்படுவது சர்வவியாபகமான உண்மை என்பதேதான். 'ஸிக்மன் பிராய்ட்' முதல் 'எர்ளி ஸ்ரான்லி காடனர்' வரை பலரையும் செல்லக்கிளி குடைந்தும் விடைகாண முடியாமல் மஜிஸ்ரேட் வாசலுக்கு வந்திருந்தான். அவன் பெயரில் ஆணும் பெண்ணும் இணைந்திருப்பது போலவே அவனும் சோடியில்லாமல் ஒரு சோடிச் செருப்புடன் மாத்திரமே வந்திருந்தான்.

குண்டுக் கத்தரிக்காய் 'குசுமா'ச் சட்டத்தரணி. வெளித்தோலுரிக்காத தேங்காயைப் போன்ற தனது கைப்பையை மிக அகல விரித்தபடி மேசை ஓரமாக வைத்திருந்தாள். விசித்திரமான அவள் உடல். ஆணும் பெண்ணும் அல்லாத சாரீரம். கசங்கிய ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகள் அந்த விரிப்புப் பைக்குள்ளே வழக்குத் தட்சணை உண்டியலுக்குள் அர்ச்சனையாகி வைக்கப்பட்டபடி இருந்தது. சட்டத்தரணி இத்தனை வாய்ப்பான வளங்கொழிக்கும் தொழிலா என்பதை வினாவாக்கி இவன் வியப்பின் விழி இமைகள் வட்டமிட்டதில் கண்டு கொண்டிடலாம்.

ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டி மாமா வைப்பாரு. அவ ஆம்பிளையா பொம்பிளையா என்னான்னு கேளு. விஜயகுமாரி கிண்டலடித்து, கல்யாண்குமாரைக் கேட்டுப் பாடும் கறுப்பு - வெள்ளை கலந்த பாடல் செல்லக்கிளி நினைவில் எழும்படி குசுமா தெரிந்தாள். உடல் ஆணைப்போல் அமைந்த அவளையே கம்பீரமான ஆண் சட்டத்தரணிகளை எல்லாம் விட்டு விட்டு வட்டமிட்டு மொய்த்தபடி இருந்தார்கள். வழக்குச் சிக்கலில் மாட்டுப்பட்டவர்களைத் தேனீக்கள் போலக் குசுமா இழுத்து வைத்திருந்தாள். வாக்குச் சாதுரியம் அவளுக்கு வாய்த்த ஐஸ்வரியமோ? சுறு சுறுப்பு வயதில் சரி அரைவாசியைக் கூடக் குறைத்தே காட்டியது. நெஸ்கபே இல்லா விட்டால் பூலோகமே இருண்டது போலத் துடித்துப்போவாள். அவளுடைய றைவர் கையில் தேமோபிளாஸ்கில் சுடச்சுட நெஸ்கபே வைத்தபடி ரிஷி மூலக் கதாநாயகன் போல வெளியில் நின்றிருந்த ஆலமரத்தடியில் சாய்ந்தபடி நின்றிருந்தான்.

ஆறேழு மாதங்கள் ரிமாண்ட் கைதியாகிப்போனவன் ஒருத்தன் மேடையேறினான். எதிர்முனையில் அவனது மனைவி குழந்தையைக் காவி இடுப்பிலே வைத்தபடி நின்றிருந்தாள். குழந்தையின் போசாக்கு போதுமானதாகத் தானிருந்தது. அதன் கழுத்திலே தங்கச் சங்கிலி, கொசுக்கடி நிறைந்த வட்டாரத்திலே இவன் குடியிருந்தமையால் அவள் அங்கெல்லாம் குடிபுக மறுத்து வாதிட்டு, பராமரிப்புக்கோரி வழக்குத் தொடுத்திருந்தாள். பராமரிப்புத்தொகை தற்காலிகமாக நிர்ணயஞ்செய்தார் நீதிபதி. அவன் தொகையைக் கட்ட மறுத்ததால் சிறையுள்ளே அடைபட்டுப் போயிருந்தான். தொழிலின்றி வருவாயின்றி முடங்கிச் சிறைக்கூடம் காரணகர்த்தாவாகி அவனை மேலும் வதைத்தெடுத்தது. ஊனமில்லா உனக்கு உழைத்துப் பெண்சாதியைக் காப்பாற்ற முடியும் என்பது அவனது பெண்சாதியே அமர்த்திய வழக்குரைஞரின் சட்ட வாதாயிருந்தது. கொசுக்கடியில்லாச் சூழலில் நல்ல வாடகை கொடுத்தபின் குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கலாம் என்று காலத்தை ஒத்திப் போடுவதில் தன் தொழில் திறமையை அவர் காண்பித்தார். ஐந்துங்கெட்டு ஆறறிவும் பட்டுப்போன ஆண்மகன் சிறைக்கூடத்தில் ஆறேழு மாதங்கள் அடைபடுவதானான். அவன் போட்டிருந்த சேர்ட்டின் கசங்கல் செல்லக்கிளிக்கு விநோதமாகத் தெரியவில்லை. 'ரிமாண்ட்' வாழ்க்கையின் ஆணிவேர் அவனது ஆண்மை நிலைப்பாட்டை உலுக்கியெடுத்தது.

அதிசயம்! செல்லக்கிளியைப் பிடித்தாட்டிற்று. இனப்பெருக்கம் செய்வதில் பெண்மைக்குள்ள முதன்மைப் பங்கு அவனுக்குள்ளும் உடல் வாளிப்பு எல்லா ஆண்களையும் போல் அவனுக்குள்ளும் சிப்பிலியாட்டம் போட்டுக் காட்டிற்று.

தலை ஒழுங்காக வாரி விடப்பட்டிருந்தது. புல்ஸீலிப் ரோஸ் கலரில் உயர்ந்த சேர்ட், பளிச்சென்று மடிப்புக் கலையாத பளபளத்த கறுத்தச் சப்பாத்துச் சோடியும், மடிப்புக் கலையாத காற்சட்டை பெல்ட்டுடன் போட்டிருந்தவன் கூண்டில் ஏறியதுமே சரமாரியாக, நீதவான் தனது ஊதா நிறப்பட்டி அங்கியைச் சரி செய்தபடி கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"மாசம் எவ்வளவு சம்பளம்?"

"நாலாயிரம்."

"சுத்தப் பொய். பத்தாயிரத்து இருநூறு"

குறுக்கிட்டார் எதிர்த்தரப்பு வழக்கறிஞர். எடுத்ததற்கெல்லாம் 'அன்ரூ' சொல்லித் தொடங்கி வாதிடுவதே அவருக்கு வாடிக்கை. என்.எல்.ஆர் தூக்கி வைத்திருப்பதே அவருக்கு கை வந்த கலை. உடனடியாக நீதவான் மசிந்து போனார். குறிப்பேட்டில் விறு விறு என்று ஏதோ எழுதினார்.

"மூவாயிம்"

வாய்மொழிந்தார் நீதவான்.

வழக்கின் கோப்பை மூடி வைத்தார். நீதி மடிவதுபோல கோப்பும் மடிந்தது. இந்தப் பக்கத்தில் நின்றிருந்த கறுப்புக் கோர்ட்டுத் துரை அவனிடம் தன் கைநீட்டினார். பிச்சை கேளாமல் ரூபாய் கைமாறியது. வழக்கின் அடுத்த திகதியும் சொல்லப்பட்டது. எதிர்த்தரப்பு வழக்கறிஞர் அந்தத் திகதிக்கும் எதிர்ப்புத் தெரிவித்தார். அதன்பிறகு வேறோர் திகதி சொல்லப்பட்டது. அவர் ஒத்துக்கொண்டார்.

கூண்டிலிருந்தவன் கீழிறங்கிக் கொண்டான்.

பராமரிப்புத் தொகையை ஆண்மகன் கோரி வழக்காடினால் உழைத்துச் சீவிப்பதற்கு உனக்கென்ன என்று எதிர்க் கேள்வி கேட்கின்ற இதே நீதிபதி கொசுக்கடி காரணங்காட்டி பெண்ணை ஒட்டவிடாமல் குடும்பத்தை வெட்டி, நீதி நிலை நாட்டுபவர்.

செல்லக்கிளி விசித்திரத்தைத் தரிசித்தான்.

பக்கத்திலிருந்தவன் இடித்து நெருக்கி வதைத்தபடி குசாலாகவே இருந்தான். இளஞ்சிவப்பு ஹெல்மட்டை மடியில் வேறு வைத்திருந்தான். அது அவனது சமூக அந்தஸ்தை நிர்ணயிப்பதுபோல் அவனோடு ஒட்டிக்கொண்டிருந்தது. இவனுக்குள் ஆண-பெண் உறவுச் சிக்கல் என்னவாயிருக்கும் என எடை போட்டான்.

மூட்டைப் பூச்சிகள் வாங்குகளின் இடுக்குகளிலே மறைந்துநின்று அவன் தொடையைப் பதம் பார்த்தன. எழும்பி நழுவுவதே உசிதமான காரியமாகச் செல்லக்கிளிக்குத் தோன்றியது.

# வேடதாரியும் சமாதானமும்

அந்த இசைக் கலைஞன்
முட்கம்பிகளால் சுற்றி
அடைக்கப்பட்டிருந்த
நகரத்தைக் கடந்து வந்திருக்கிறான்.

சமாதானத்துக்கான இசைநரம்புகள்
அறுந்து தொங்கும் வாத்தியத்தை
தோளில் மாட்டியிருந்தான்
வெளிர் நீல நிறமான ஆகாயத்தில்
பறந்து கொண்டிருந்த
பிக்காசோவின் அமைதிப்பறவை
சிறகிழந்து போனதைப் பற்றி என்னுடன்
மணிக்கணக்காகப் பேசினான்.

சமாதான வேடதாரிக்கான
ஒப்பனைக்காரர்கள்
வெட்கமும், அவமானமும்
அடைய நேர்ந்தாலும்
'அது ஒத்திகைகளில்
சரிவந்து விடுமென்று'
தம்மைச் சமாதானப்படுத்திக்
கொள்கிறார்கள்
பிரதியை எழுதி திரை மறைவில்
வைத்துக்கொண்டிருப்பவனுக்கோ
சமாதான வேடதாரி பழக்கதோசத்தில்
வாய் தவறி எதையாவது
உளறிவிட்டால்
என்ற பயம் வேறு
ஒளி அமைப்பாளர்களோ
தேவையேற்படின்
காட்சிகளை இருளிலேயே
நிகழ்த்திவிடலாமென்று
தம்மைச் சமாதானப்படுத்திக்
கொள்கிறார்கள்
உலக சமாதானத்துக்கான
ஓவியம் குறித்து
உனக்கு தெரிந்தவற்றுள்
எதையாவதொன்றை
அவர்களுக்குக் காண்பிக்கக்
கூடாதாவென்று கேட்டேன்
அவன் சிரித்தான்
சரி, இசைக்கலைஞனே!
முடிந்தால் சமாதானத்துக்கான
ஒரு மெட்டுப் போட்டுத்
தரமுடியுமா என்று கெஞ்சிக்கேட்டேன்.

இடியும் மின்னலுமான
பேரிசை முழங்கிற்று
மேகங்கள் கரு முகில்களால் சூழ்ந்து
சோவெனப் பொழிவது போன்ற
இசை பெருகிற்று
காற்றின் உடல் தரித்த
இசைக் கலைஞன்
எனது இளம் வீரர்களால்
போரில் வீழ்த்தப்பட்ட
டாங்கிகளின் துளைகளின்
ஊடாக நுழைந்து
இசையாய் நிரம்பினான்.

யுத்த டாங்கிகளுக்கருகில்
புற்களாலான கூடொன்றில்
தனது குஞ்சுகளுடன்
சாம்பலில் குளித்ததைப் போன்ற
நிறத்தை உடைய
கானாங்குருவி
திசைகளைப் பார்த்தபடி இருந்தது.

— தா.பாலகணேசன்



# திணை மயக்கம்!

தமிழ் நாட்டில் பேசப்படும் கவிஞர்களில் நெல்லை ஜெயந்தாவும் அடங்குவர். இவர் எழுதி, வெளியிட்ட கவிதைத் தொகுப்பான திணை மயக்கம் எல்லோரின் பார்வையையும் இழுத்திருக்கிறது. தாய்ப்பாலிலும் கலப்படம் தமிழ்! என்று அம்மாவிற்கு சமர்ப்பணம் செய்யும் போது எவ்வளவு அழகான கருத்தாக அமைகிறது.

கவிஞர் சொல்லும் போது முற்றுப் பெற்றுவிட்டன. மூன்று ஆண்டுகள் என் முதல் தொகுப்பு வெளிவந்ததும், வைகைக் கரையிலிருந்த நான் வங்கக் கரைக்கு குடிவந்தும், இடைக்காலத்தில் எழுதப்பட்ட என் கவிதைகள் திரட்டப்பட்டிருக்கிறது திணைமயக்கமாய்.

இலக்கியம், பொறியியல் என இரட்டைப் புரவியில் பயணிக்கும் என் ஒற்றைப் பாதையில் சாதிப் போமா கவிதைகளில் எனும் சந்தேகம் அவ்வப்போது என்னை சிலந்தி வலையாய் சிக்க வைக்கிறது. அப்போதும் தமிழ்தான் வந்து தப்ப வைக்கிறது.

அதற்கொரு உதாரணம் ஆனந்த விகடன் பவழ விழா கவிதைப் போட்டி, விகடன் முத்தாபரணமாய் கோர்த்த முத்திரைக் கவிதைகள், எழுபத்தைந்தில் வாசகர்கள் தாங்கள் வாசித்த கவிதைகளில் தங்களை வசீகரித்த கவிதகளாய் அடையாளமிட்ட ஐந்தில் ஒன்றாய் என் 'திணை மயக்கம்' கவிதையும் தெரிவானதே.



சாகித்திய அக்கடமியே கிடைத்ததாய் சலங்கை கட்டி ஆடியது இந்த சாமானியனின் இதயம்!

இலக்கிய வாசகர்களே, இழைத்துத் தந்த கிரீடமல்லவா அது! இப்படி தாள்களின் வடிவத்தில் தழுவிக் கொள்கிற தமிழ், ஆண்களின் வடிவத்திலும் ஆதரிக்கின்றது என்னை.

அலுமாரியில் அல்ல நான் என் கவிதைகளுக்குள்ளேயே வைத்திருக்கும் கவிதைப் புத்தகம் அண்ணன் அறிவுமதி இவரிடம் கவிதை சொல்லுவது தான் என் உதடுகள் கொண்டாடும் ஓணம் பண்டிகையோ? என்று நான் வியந்து மயங்கும் இசையமைப்பாளர் வித்தியாசாகர்.

'தென்றலோடு சில தினங்கள்' எனும் என் முதற் கவிதைத் தொகுப்பையும் படித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டு மடல் ஒன்றை எனக்கெழுதே.

வானவில்லே தடவிக் கொடுத்த வண்ணத்துப் பூச்சியாய் திக்கு முக்காடி, நன்றி மடலொன்றை நானெழுத, அந்த நன்றி மடல் குறித்து மறுநாளே முரசொலியில் ஈரத்தமிழ் சொட்டச் சொட்ட எழுதினாரே அதுதான் எனக்கிந்த ஞாலத்தில் கிடைத்த ஞான பீடம்!

அவர் விழிகளின் வெளிச்சக் கீற்றுக்காக காவிய பிருந்தாவனங்களே காத்துக்கிடக்கையில், அணிந்துரை எனும் பெயரில் இந்த ஒற்றைப் பூவின் மீது ஓடியிருக்கிறது அவர் சூரியரேகை.

நயாகராவாகிறது என் நன்றியின் கசிவு என் தொகுப்பை தன் தொகுப்பாய் நேசித்து, அந்த கருணை மானிடம் என்னை அறிமுகப்படுத்திய கவிதைமான் பழநிபாரதி என்று முடித்தார்.

யார் பிச்சை இடுவது?
நிலங்களே
திருவோடு ஏந்தினால்

ooo

எந்தத் தாயும்
நிலாவை இங்கு
நிமிர்ந்து பார்ப்பதில்லை
கழுத்து வலிப்பதாலல்ல
சோறூட்டிய நினைவில்
இதயம் வலிப்பதால்

ooo

அவள் கண்களைப் பார்த்தால்
மீன்!
கண்களால்
அவள் பார்த்தால்
தூண்டில்!

ooo

பள்ளிகள் உயிர்த்தெழும்!
பெற்றோர்கள்
அறையப் படுவார்கள்!
பிள்ளைகள்
சிலுவை சுமப்பார்கள்.

ooo

எப்படி ரசிப்பது
மழையை
ஒழுகும் குடிசைகளில்!
பூக்களும்
சருகுகள் தாம்
விடுதலைகளின்
பார்வையில்

ooo

புதைத்தது ரோஜா
முளைத்தது மல்லிகை

ooo

தெருச்சந்தி
திண்ணை வாசிகளை
அழைத்துப் போய்
வீட்டிற்குள்
அடக்கம் செய்து விட்டன
தொலைக்காட்சி இணைப்புகள்


ooo

தெருவெங்கும்
வெட்டப்பட்ட
கிளைகளோடு
விழுந்து கிடக்கின்ற
முட்டைகள் அமைந்த
கூடுகள்!

நெல்லை ஜெயந்தா

# குறிஞ்சிப் பாட்டு

தலைவன், தலைவி ஆகியோரிடையே ஏற்படுகின்ற அன்பு, அந்த அன்பு ஏற்படுகின்ற சூழல் என்பவற்றை இலக்கியங்கள் அழகாக வெளிப்படுத்துகின்றன. இலக்



பூ.நகுலன்.

...ன இலக்கியங்களே இவற்றை அதிகளவில் வெளிப்படுத்துகின்றன.

ஆரியஅரசன் பிரகதத்தனுக்கு தமிழ் அறிவிப்பதற்கு கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட 'குறிஞ்சிப் பாட்டு' என்னும் சங்க இலக்கியம் இத்தகைய சூழலை நன்கு வெளிப்படுத்துகின்றது.

தமிழரின் நாகரிகம், காதல் முதலியவற்றை மரபு தவறாமல் உணர்த்தக் கூடிய ஒரு நூலாக குறிஞ்சிப்பாட்டு விளங்குகின்றது.

ஒளி பொருந்திய நெற்றி, மென்மையான கூந்தல், அழகு நலன்கள் உடைய தலைவி தன் தோழியோடு இருக்கின்றாள்.

திணைப்புலமும் அதனைக் காவல் காப்பதும் தலைவியின் மரபாக அமைந்துள்ளது. தோழி தலைவிக்கு உதவியாகக் காணப்படுகின்றாள்.

இந்த நிலையில் தலைவன், தலைவியை சந்திக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துகின்றார் கபிலர்.

இளமையும் நேர்மையும் வீரமும் உடைய தலைவன், கையில் ஆயுதத்துடன் (வில் அம்பு) வேட்டையாடக் கிளம்புகின்றான். வேட்டையாடும் மிருகத்தை தலைவன் வெகு தூரம் துரத்தி வருகின்றான்.

அந்த வழியில் தலைவியின் இருப்பிடம் காணப்படுகின்றது. தலைவி தலைவனோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டிய அசாதாரண நிலை தோற்றுவிக்கப் படுகின்றது.

'வேட்டை நாய்கள்' தலைவியின் இருப்பிடம் நோக்கி வருகின்றன. தலைவி காவல் புரியும் திணைப்புலத்தை உற்றுப் பார்த்தபடி அவற்றைக் கவர்ந்து கொள்ள வருகின்றன.

தலைவி, தோழி ஆகியோரிடையே தோன்றிய இந்தத் அசாதாரண சூழ்நிலை அச்சம் இவற்றைப் போக்கி, இன்மொழிகளால் ஆறுதல் கூறும் வகையில் தலைவன் திணைப்புலத்தில் உள் நுழைகின்றான்.

தலைவனின் உள்வருகையால் அச்சம் நீங்குகின்றது. தலைவனின் அன்பு, தலைவியின் உள்ளத்தே நுழைந்து, தலைவன் உருவம் நீங்காமல் இருக்கின்றது.

தலைவன், தலைவி ஆகியோரிடையே ஏற்பட்ட இந்த அன்பு காதல், கற்பு, மணமோடு நிறைவு பெறுவதை குறிஞ்சிப்பாட்டு உணர்த்துகின்றது.

ஒருவன், ஒருத்தி என்ற இனிய இல்லறக் கொள்கையைத் தமிழர் வாழ்வியல் இலக்கணமாக வகுத்த பெருமை கபிலரைச் சார்கின்றது.

*'செந்தமிழ் நாடென்னும்*
*போதினிலே தேன் வந்து பாயுது*
*காதினிலே'*

என்றார் பாரதியார். மிகச் சிறந்த ஒழுக்க நூல்களை, இலக்கியங்களை வாழ்வியல் உண்மைகளை உடைய செந்தமிழ்நாடாக தமிழ்மொழிவிளங்க வேண்டும். தமிழர்கள் அதற்கிசைய தமது வாழ்வியலை அமைத்துக் கொள்ளல் வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் தான் 'காதில் தேன்பாயும்.'

# வன்னிக்காடு

தேக்கிவைக்க தண்ணீருக்காக பாத்திகட்டி, பச்சைப் பசேலென அடையாளப்படும் மண்ணில், சேற்றுக்குள் கால் புதைவதும், புல்லுக் கட்டி தலையில் சுமப்பதும், இடைக்கிடை மரத்தடியில் களைப்பாறி வேடிக்கையாகப் பேசி, சந்தோஷமான நாட்களை அனுபவித்த ஆறுதலில் வீடுசேரும் மாலைப்பொழுதும் இவர்களுக்கானது.

நிலங்களுக்குக்கூடப் பிரிகின்ற சோகம் இங்கில்லை. வீட்டுக் கதவு தொடக்கம் யன்னல்வரை அடைபடுகின்ற தனிப்பட்ட வாழ்வும் இங்கில்லை.

இயற்கையுடன் ஒட்டி வாழ்கின்ற மனசும், கனவுகள் இல்லாத இதயங்களும் குடிகொண்டிருக்கிற இந்த ஊருக்குள், வெறுங்காலுடன்தான் செல்லவேண்டும். வேலிகள் இல்லை. ஆனால் வரம்பு மீறி மேயாத ஆடுகளும், மாடுகளும், கூண்டுக்குள் தானாக அடைபடும் கோழிகளும் வாழ்கிறது.

வானம் பார்த்தும் பிரமிப்பில்லாமல், தூரம் பார்த்தும் களைத்து விடாமல் அயராது உழைத்தும், சின்னக் கொட்டிலுக்குள் வாழ்வு ஆயுள் பெறுகிறது.

கூட்டமாகப் பறந்துதிரியும் பறவைகளும், ஒரே மரத்தின் மேல் தங்கிவிடுவதும், ஒன்றாக இரை தேடுவதும் கூடவாக இருக்கிற இந்த ஊர்மட்டும் நகர் வாழ்வுடன் ஒத்துப்போக முடியவில்லை.

ஒற்றையடிப் பாதையில் அவசரம் இல்லாமல் பயணிக்கையில் விஷப் பாம்பிருக்கும். ஆனால் தீண்டாது விலகிப் போகும். அடிக்கடி நனைக்கும் வாய்க்காலின் தண்ணீர் ஒற்றைச் சேலைத்தலைப்பின் சல சலப்பு என்றுமே சூடாக்கியது கிடை யாது.

மனம் வார்த்த வார்த்தைகளுக் குள் வியர்வை அமிழ்ந்துபோகும். சுகநலம் பகிர்ந்துகொண்டதும், மிச்சமாக ஒன்றுமேயில்லாததும், வெறுமையுடனும் முகம் பார்த்து புன்னகை மேலிட, வாழாதவர்கள் இங்கில்லை.

செம்பாட்டு மண்ணின் மழைக் காலக் குழைவும், வெய்யில்கால இறுக்கமும் கொண்ட ஒழுங்கைகள் எல்லாம் நடந்து செல்லத்தான் அனுமதிக்கின்றது.

சின்னம் சிறுசுகளின் நீச்சலில் மெதுவாகச் செல்லும் வாய்க்கால் தண்ணீர் அழுக்கினைப் போக்கி இருக்கிற மணலில் குடிசைகள் சுவர் கொள்ளுகிறது.

காட்டு மரங்கள் அரணாக முன் நின்று காயம் பட்டும், பாதையின் றிக் காடு சூழ்ந்திருந்தும் போராளிக ளின் பாதச்சூட்டில் வழிகாட்டுகிறது.

விடுதலையின் இதயமாக, மூச்சு விடும் இடைவெளிக்குள் மறை விடமாக வானம் பார்த்து வளர்ந் தும், நீண்ட பரப்பில் படர்ந்தும், அனுமதி இல்லாமல் உள்நுழைய விடாமல் போராளிகளை மட்டும் பாதுகாக்கிறது.

நவீன ஆயுதங்களும், ஷெல்க ளும் சல்லடையாகத் துளைத்தும், நிமிர்ந்து நின்று போராளிகளின் விழுதினை வளர்த்திருக்கின்றது.

இடப்பெயர்வு .... கிளாலிப் பாதை, இழந்ததை மீட்டுக் கொடுக்கிற நம்பிக்கையில் வரவேற்று நிழல் தந்த மரங்களும் ஒவ்வொரு உயிரையும் கைப்பிடித்து மீண்டும் புதியவாழ்வுக்கு வழிகாட்டியது.

வெற்றியின் இரகசியம் அறியும் காட்டில் எத்தனை முறைகள் தோல்வி கண்டும் நெருங்கி வந்த படைகள் ஒரே நாளில் ஓடியதும், பெருமிதத்தோடு சுருக்குப்போடும் கழுத்தடியில் ஆனையிறவு முகாமும் வீழ்ந்ததும், பூநகரி தானாக மறைந்ததும், வீரம் பேசும் வன்னிக்காடு.

- செல்வா.

# ஆங்கிலமொழிக் கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!



கிளிநொச்சி—

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியில் ஆறுமாத கற்கை நெறியினை நிறைவு செய்த முதலாவது அணியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழக கேட்போர் கூடத்தில் காலை 11 மணிக்கு மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கம் கலந்து கொண்டார்.

இந்தத் நிகழ்வின் தலைமையுரையினை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் நிகழ்த்தினார். சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வு நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் வழங்கினார்.

அவர் தனது உரையில் -

ஆங்கில மொழி நெறியினை நிறைவு செய்த முதலாவது அணியினர் வருங்கால சமூகத்தில் ஆங்கில அறிவினை ஊட்டுவதில் அர்ப்பணிப்புடன் பணிபுரியவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை நிர்வாக அதிகாரி நளாயினி நிகழ்த்தினார்.

# சாகாத வரம்பெற்ற பிளாஸ்ரிக் சூழல் மாசடைவதற்குக் காரணம்

## கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன்

கிளிநொச்சி—

சூழலின் வளத்தைப் பேணுவதற்காக வீதியோரங்களில் மர நடுகைகள் ஏற்படுத்துவதையும், பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்குமான நடவடிக்கையில் ஈடுபடுகின்றோம் என கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இ.ராஜன் தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் நேற்று நடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிளாஸ்ரிக் பொருட்கள் இன்று பெரிய பிரச்சினையாகவுள்ளது. இது சாகாதவரம் பெற்ற ஒன்றாக இருக்கின்றது. அதை எரிக்க முடியாமலும் இருக்கிறது. அடுத்த பிரச்சினையாகப் பாதீனியச் செடிகளால் சூழல் மாசுபடுத்தப்படுகிறது.

இதைவிட எதிரியானவன் திட்டமிட்டு எமது இயற்கை வளங்களையும், பயன்தரு மரங்களையும் அழித்துவருகின்றான். ஆகவே இவ்வளங்களை மீண்டும் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றோம்.

மரங்கள் அழிக்கப்படுவதை கருத்தூட்டல் நிகழ்ச்சிகள்மூலம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் உலக சுற்றாடல் தினம் நேற்றுக் காலை 10.15 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் இ.ராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, மாவட்ட செயலகப் பிரதிநிதி கேதீஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசிய கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடியை கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட அலுவலர் சிவஞானம் நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரையை கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இ.ராஜன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் உத்தியோகத்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி, தூயவன் அரச அறிவியல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது - கண்காட்சி மண்டபத்தை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், ஓவியக் கண்காட்சியை ஓவியர் புகழேந்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், தமிழீழ அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## கடனுதவி வழங்கல்

கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் - ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு கழக நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் கடனுதவிகளுக்கு ஆலடிக்கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 2 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், 2 பயனாளிகளுக்கு மருந்து தெளிக்கும் கருவிகளும் சுயதொழில் ஊக்குவிப்பிற்காக 5 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 06

1683 : "ஒஸ்மோலின் அருங்காட்சியகம்" ஒக்ஸ்போட்டில் திறந்து வைக்கப்பட்டது.

1778 : ஒஸ்ரிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல், நிக்கோபார் தீவுகளில் ஒன்றான நான்கௌரித் தீவைச் சென்றடைந்தது. அந்தக் கப்பலின் தளபதி, அங்கு ஒரு சிறு கோட்டையைக் கட்டி ஒஸ்ரியாவின் கொடியைப் பறக்கவிட்டார்.

1844: வை.எம்.சீ.ஏ எனப்படும் கிறிஸ்தவ இளைஞர்கழக அமைப்பு முதன் முதலாக, ஜோர்ஜ் வில்லியம்சினால் லண்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1882 : உடைகளை அழுத்தப் பயன்படுத்தும் "மின்சார அழுத்தி" (IRON BOX) தயாரிக்க நியூயோர்க்கைச் சேர்ந்த ஹென்றி. டபிள்யூ.சீலி என்பவர் காப்புரிமம் பெற்றார்.

1917 : முதலாம் உலகப் போரில் பிரிட்டிஷ் விமானப்படை வீரர் கோலிஷ்ஷாவில் நடந்த விமானப்போரில் ஒரே தாக்குதலில் மூன்று ஜேர்மனிய விமானங்களை வீழ்த்தினார்.

⊘ விவசாயத்துறைகளில் பெருமளவு பெண் தொழிலாளர்களை ஈடுபடுத்தும்படி பிரித்தானிய அரசு வேண்டுகோள் விடுத்தது.

1918 : ஜேர்மனியின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து, கருங்கடல் கடற்படைப் பிரிவை லெனின் செவாஸ்ட்டோபோல் என்ற பகுதிக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

1919 : பின்லாந்து - ரஷ்யா மீது போர்ப்பிரகடனம் செய்தது.

1933 : திறந்தவெளி சினிமா அரங்கு நியூ ஜெர்ஷியில் - காம்டென் எனும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. கார்களில் இருந்தபடியே திரைப்படம் பார்க்கக்கூடியதான இந்தத் திறந்த வெளி அரங்கில் 400 கார்கள்வரை நிறுத்துவதற்குரிய வசதிகள் இருந்தன.

1942 : முதன் முதலாக "நைலோன் பரசூட்டின்" மூலம் இங்கிலாந்தின் ஹெர்ட்ஃ போர்ட் என்னுமிடத்தில் "அடி லைன்கிரே" விமானத்திலிருந்து குதித்துக் காட்டினார்.

1944 : இராணுவ வரலாற்றிலேயே மிகப்பெரிய படை நடவடிக்கையான டி.டே (D - DAY) படையெடுப்பு நிகழ்ந்தது.

⊘ நோர்மண்டி போர்க்களத்தில் பிரிட்டிஷ் படைகள் முதன் முதலாக நேபாம் (NAPALM) குண்டுகளைப் பயன்படுத்த ஆரம்பித்தது.

1948 : சினிமாவைக் கண்டுபிடித்த பிரான்ஸைச் சேர்ந்த லூமியர்ஸ் சகோதரர்களில் ஒருவரான லூயிஸ் ஜூன்மியர் காலமானார்.

1963 : ஈரானில் இமாம் கொமெய்னி கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பெரும் கலகம் ஏற்பட்டது. இதன் காரணமாக இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

1971 : ரஷ்யாவில் சோயுஸ் - 11 என்னும் விண்கலம் ஏவப்பட்டது. இதில் சென்ற ஜியார் ஜிடோப் ரோப்ஸ்க்கி, விளாடிஸ்லாவ் வோல்க்காவ், விக்டர் பட்சேயவ் ஆகிய மூன்று விண்வெளி வீரர்களும் 24 நாள்கள் விண்வெளியில் தங்கியிருந்துவிட்டு திரும்பி வருகையில் விண்கலத்தில் ஏற்பட்ட தொழல்நுட்பக் கோளாறு காரணமாக இறந்துவிட்டனர்.

1981 : உலகிலேயே மிக மோசமான ரயில் விபத்துகளில் ஒன்று இந்தியாவில் நிகழ்ந்தது. பீஹார் மாநிலத்தில் சமஸ்திபூருக்கும், பான்முகிக்கும் நடுவே ஆற்றுப்பாலமொன்றைக் கடக்கும் போது ரயில் ஆற்றினுள் விழுந்துவிட்டது.

⊘ சோதனைக்குழாய் முறையில் முதலாவது இரட்டைக் குழந்தை மெல்பேர்ன் நகரில் இராணி விக்டோரியா மருத்துவமனையில் பிறந்தது.

1984 : அமிர்தசரஸ் பொற்கோயிலுனுள் இந்திய இராணுவம் நுழைந்தது.

1993 : தாவரங்களையும், விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்கா கையெழுத்திட்டது.

⊘ சுவீடன் நாட்டின் தேசிய தினம்

தொகுப்பு - சந்துரு

# மன்னார் கரையோர கிராமங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

மன்னார்—

மன்னார் மாவட்டத்தின் கரையோர கிராமங்கள் 100 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மன்னார் அரச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வகையில் கலந்துரையாடல் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் -மன்னார் அரச அதிபர் விசுவலிங்கம், கரையோர சமுதாய அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.எம் குறூஸ் உட்பட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு கரையோர கிராம அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்தனர்.

இதில் கரையோர கிராமங்களை 100 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்வதென முடிவு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தில் மீனவர்களுக்கான வள்ளங்கள், வலைகள் வழங்குதல் கரையோரக் கிராம வீதிகள் புனரமைத்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்*
*திருக்குறள்*

## நமது நோக்கு

### தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டிய காலம்

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக பொதுக்கட்டமைப்பு என்ற பெயரிலான மனிதாபிமான செயற்பாடுகளுக்கான நிர்வாக அமைப்பொன்றினை உருவாக்குவது தொடர்பான விவகாரமானது - இன்னமும் இழுபறிநிலையிலேயே இருக்கையில், இந்த விவகாரத்தை வைத்தே தமது எதிர்கால அரசியல் தளத்திற்கான அத்திவாரத்தை நிறுவும் முனைப்பில் ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற இனவாதக்குழுக்கள் காய்நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளமை தெரிந்தவிடயமே.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்துவதை ஆரம்பம் முதலே முழுமூச்சுடன், வெளிப்படையாகவே எதிர்த்துவருகின்ற ஜே.வி.பியினரும், ஹெலஉறுமயவினரும் இந்திய அரசின் பின்னணி ஆதரவுப்பலத்துடனேயே அரசுக்குள் இருந்த வண்ணம் அரசையும், ஜனாதிபதியையும் எச்சரித்து அச்சுறுத்தி மேற்படிகட்டமைப்பினை தம் எதிர்பார்ப்பைமீறி ஜனாதிபதி உருவாக்குவாரேயானால் - தாம் அரசிலிருந்து விலகுவோம். ஆட்சியைக்கவிழ்ப்போம். என்றெல்லாம் மிரட்டி வந்துள்ளபோதிலும், ஐரோப்பிய சமூகம் மற்றும் மேற்குலகம் - சர்வதேச நிதிவழங்கும் அமைப்புகள் போன்ற பலவும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக கொடுத்துவரும் தொடர் அழுத்தத்தைமீறி ஜே.வி.பி, ஹெலஉறுமய கும்பல்களின் கோரிக்கைகளுக்கு கட்டுப்பட ஜனாதிபதியால் முடியவில்லை.

ஜே.வி.பியினரதும், ஹெலஉறுமயவினரதும் தனக்கெதிரான அரசியல் மிரட்டல்களை நிறுத்தவேண்டுமெனில், இந்தியாவை சமாளிப்பதன்மூலம் அதனைச் சாத்தியமாக்கிவிடலாம் என்ற ஜனாதிபதியின் கணிப்பீட்டின் அடிப்படையிலான அவரது இந்திய விஜயம் பெரும் வெற்றியைப் பெறாவிட்டாலும், தோல்வியடையவில்லையென்றும் தற்காலிகமுடிவொன்றை எடுத்துக்கொள்ளமுடியும்.

கடந்த சில வாரங்களின் முன்னர் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாவதை இந்தியா விரும்பவில்லைஎன்ற இந்திய நிலைப்பாடு குறித்து பரவலாக பேசப்பட்டது. உண்மையில் ஜனாதிபதியும் இதனை உளப்பூர்வமாக விரும்பவில்லைபோதிலும், அவரது சுயவிருப்பம் குறித்து சர்வதேச சமூகம் அக்கறை கொள்ளாது தொடர்ந்தும் பொதுக்கட்டமைப்பை பல்வேறு வகையிலும் வலியுறுத்திவந்ததால் அவருக்கு மாற்றுவழி எதுவும் தோன்றாத சூழலில், பொதுக்கட்டமைப்பையும் -தமிழ்மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு புதிய தந்திரோபாய மூலோபாயமாகக் கையாள உத்தேசித்ததன் விளைவே அவரின் இந்திய விஜயமாகும்.

தனது இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி, பெற்றோலிய அமைச்சர் மணிசங்கர்ஐயர் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பின்னர் - பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இந்தியாவின் முந்தய நிலைப்பாட்டில் சிறிது தளர்வு ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது. இந்தத் தளர்வின் பின்னணியில் வேறு அரசியல் உள்நோக்கங்களும் இருக்கவே செய்கிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகப் பேசுவதற்குச் சென்ற ஜனாதிபதி - அதைவிடவும் வேறுபல இந்திய நலன்பேணும் விடயங்கள் குறித்தும் பேசியுள்ளார் என்பதும் உண்மையே. இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம், பலாலி விமானப் படைத்தள விமான ஓடுபாதை விஸ்தரிப்பு விவகாரம் உட்பட பல சர்ச்சைக்குரிய விடயங்களில் இந்தியத் தலைவர்களுடன் இணக்கப்பாட்டிற்கு அவர் வந்துள்ளதாகத் தெரிகிறது.

அல்லது - இப்படியும் கூறலாம் அதாவது, நால்போட்டு சுறாபிடிக்கும் இந்தியத் தந்திரோபாயங்களுக்குஜனாதிபதி விழுந்துள்ளார் என்றும் கூறலாம்.

எப்படியோ ஜனாதிபதி இந்தியாவைத் தற்காலிகமாக சமாளித்துள்ளமையானது, ஜே.வி.பியினர் எதிர்பாராத ஒரு நிகழ்வேயாகும்.

ஒன்றுமற்ற ஒன்றான பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலும், இந்தியா தலையிடு செய்ததன்மூலம் தனது இலக்கை அடைய முயன்றுள்ளது எனலாம்.

ஒரு மனிதாபிமானப் பணிக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதிலும் இலங்கை அரசால் சுயாதீனமாக ஒரு முடிவெடுக்கமுடியாத நிலையே உள்ளது என்பதை ஜனாதிபதியின் இந்திய விஜயம் நிரூபித்துள்ளதென்றே கூற வேண்டும்.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி ஏற்படுத்துவாரேயானால் - அழுத்தங்களுக்குள்ளான நிலையில் அவர் அதனை உருவாக்கியே தீரவேண்டிய ஒரு சூழ்நிலையும் உள்ளதால் அவர் அதனை ஏற்படுத்துவாரேயானால், தென்னிலங்கை அரசியலில் ஏற்படக்கூடிய குழப்பங்கள் மற்றும் மாற்றங்கள் எத்தகைய தாக்கங்களை உண்டுபண்ணும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

- விமல்வீரவன்ச கொக்கரிப்பதைப்போல் மீண்டும் புரட்சி என்றபெயரிலான வன்முறையில் ஜே.வி.பி இறங்குமா?

- ஹெலஉறுமய பிக்குகள் இனவெறிஅரசியலைத் தீவிரமாக்கி இன்னொருஇனக்கலவரத்தை ஏற்படுத்தி அரசியல் ஆதாயம் காணமுற்படுவார்களா?

- பொதுக்கட்டமைப்பு நீதியான முறையில் செயற்படச் சூழ்நிலைகள் அனுமதிக்குமா?

- நாட்டை இந்த நிலைமைகள் மீண்டும் யுத்தநெருக்கடிக்குள் தள்ளுமா?

இவற்றிற்கான பதில்களை அடுத்துவருகின்ற வாரங்கள் சொல்லக்கூடும். எதுவானாலும் தமிழ்மக்கள் எதனையும் எதிர்கொள்ளும் விழிப்புணர்வுச் சூழலில் தம்மை வைத்திருக்கவேண்டிய காலம் உருவாகிவிட்டது என்றால் அது மிகையில்லை.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பொதுக்கட்டமைப்பால் ஆட்சி கவிழும் திருமலை புத்தரால் போரும் மூளும்!

இலங்கையில் மீண்டும் போர் மூளுமா? என்று சிலர் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். நீர் என்ன நினைக்கிறீர் என்று கேட்டுக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் எடுத்துச் சொல்லவேண்டிய புத்தபிக்குகள் - விடுதலைப் புலிகளை அழிப்பதற்குப் போர்புரியவேண்டுமென்று குரல்கொடுப்பதால் மீண்டும் போர் மூளுமா என்ற கேள்வி எழுந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாம். என்றாலும் இன்றுள்ள நிலையில் போர் மூளும் என்றும் சொல்லமுடியாது, போர் மூளாது என்றும் சொல்ல முடியாது என்றேன்.

இந்தியா மாதிரி நழுவலாகப் பதில் சொல்வதற்கு நீரும் பழகிக் கொண்டீர். நீரும் இந்தியா மாதிரிக் காரியத்தில் கண்ணாயிருப்பீர் என்றுதான் நானும் நினைக்கிறேன். கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கு வெளிநாடுகள் இரங்கிக் கொடுத்த உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்குப் பொதுக் கட்டமைப்பு அமைப்பதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துவிட்டது. ஆனால், அது தெரிவித்துள்ள யோசனைகளின்படி பொதுக்கட்டமைப்பில் திருத்தம் செய்யப்படுமாம் என்றார் பரமசிவம்.

பார்த்தீரா பொதுக்கட்டமைப்பு சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்று எல்லா நாடுகளும் சொல்லிக் கொண்டிருந்தன. இந்தியா எதுவும் சொல்லாது மௌனம் சாதித்தது. அம்மையார் நேரில் போய்ப் பேசினார். தங்கள் யோசனையின்படி பொதுக்கட்டமைப்பை உருவாக்கச் சொல்லிவிட்டார்கள். இந்த யோசனைகள் என்னவென்று தெரியவில்லை. முதலில் நோர்வே சொல்ஹெய்ம் சொன்ன யோசனைகளும் என்னவென்று தெரியாது. இந்த யோசனைகள் முழுத் திருப்தி தராவிட்டாலும், அதை விடுதலைப் புலிகள் ஏற்றிருந்தனர். புலிகள் ஏற்ற யோசனைகளில் இந்தியா திருத்தம் செய்யச் சொல்லியிருக்கிறது. அம்மையாரும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறாரென்றே தோன்றுகிறது என்றேன்.

இந்தத் திருத்தங்களுடன் தயாரிக்கப்படும் பொதுக்கட்டமைப்பு விடுதலைப் புலிகளுக்குத் திருப்தியளிக்காவிட்டால் என்று பரமசிவம் கேட்டார்.

பொதுக்கட்டமைப்பில்தான் விடுதலைப் புலிகளுக்கு எப்போதோ நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதே என்றேன்.

பொதுக்கட்டமைப்போ வேறு எதுவோ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பில்லாமல் தமிழீழத்தில் நல்லமுறையில் செயற்படமுடியாது. இது இலங்கை அரசுக்குத் தெரியும், இந்தியாவுக்கும் தெரியும் என்றார் பரமசிவம்.

சேது சமுத்திரத் திட்டத்துக்கு மாற்று வழி காண்போம் என்று துறைமுகங்களின் அமைச்சர் மங்கள சமரவீர சொல்லமுடியுமென்றால் பொதுக்கட்டமைப்புக்கு மாற்றுவழி தேடமுடியாதா என்ன? என்றேன்.

பொதுக்கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்த முனைந்தால் நாடு பிரியுமென்றார்கள். திருமலையில் இரவோடு இரவாக வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டாலும் தமிழ் மக்களுக்கு கதவு திறக்கப்பட்டுவிடும் என்றும் சொன்னார்கள். இதில் எது முதலில் கதவைத் திறக்கும் என்று நினைக்கிறீர் என்று பரமசிவம் கேட்டார்.

இதில் எது திறக்குமோ தெரியாது தமிழீழத்துக்கு கதவைத் திறந்துவிடப் போகிறவர்கள் அவர்கள்தான். எப்போது எப்படித் திறந்துவிடப்போகிறார்களென்பதை அவர்களை அறியாமல் அவர்களே நிறைவேற்றுவார்கள் என்றேன்.

நீர் சொல்வது சரிதான் என்றாலும் இப்போதுள்ள நிலையில் பொதுக்கட்டமைப்பு இந்தியாவின் யோசனைப்படி திருத்தப்பட்டாலும் உருப்பெறுமா என்பது சந்தேகம். பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி. விமல் வீரவன்ச அம்மையார் இந்தியாவிலிருந்து திரும்பிய சமயத்திலும் சொல்லியிருக்கிறார். ஆட்சி கவிழ்ந்தால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தோற்றுப் போவார். அடுத்த தேர்தலில் சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவராகலாம். ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகாரமே இல்லாது போய்விடுமென்று விமல் வீரவன்ச சொல்கிறார். பொதுக்கட்டமைப்பு இன்றுள்ள நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஜே.வி.பி விலகினாலும் யு.என்.பியும் தமிழ் கூட்டமைப்பும்கூட ஆதரவளிக்கலாம். ஆனால் இனிச் செய்யப்போகும் திருத்தம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாவிட்டால் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிக்கமுடியுமா? என்று கேட்டார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்பு நிலை இப்படியிருக்கும்போது புத்தர் சிலை விவகாரம் பெரிதாகிவிடும்போல இருக்கே. இப்போது புத்தர்சிலை ஏன் வைக்கப்பட்டதென்பதை புத்தபிக்குகளும், சிங்கள பௌத்த ஊடகங்களும் அவற்றில்வரும் கட்டுரைகளும் விளக்கமாகத் தெரிவிக்கின்றன. திருக்கோணமலை பௌத்தர்களுக்குத்தான் சொந்தம் என்பதை நிலை நாட்டுவதற்கே புத்தர் சிலை வைக்கப்பட்டதென்பதையும் இதன் பின்னணியில் சில புத்த பிக்குகளும் ஓட் டோக்காரர்களும் மட்டுமல்ல வேறு பெரிய சக்திகளும் இருக்கின்றனவென்பது தெளிவாகத் தெரிகிறதென்றும் சொன்னேன்.

பொதுக் கட்டமைப்பு வருகிறதோ இல்லையோ சாந்தியும், சமாதானமுமே உருவமான புத்தர்தான் மீண்டும் போரைக் கொண்டுவருவார் போலிருக்கிறது. இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் வேண்டுமென்று அவசரப்படுவதும், திருகோணமலையைச் சொந்தம் கொண்டாடுவதற்குப் பாதுகாப்புத் தேடத்தான் என்று சொல்லிக்கொண்டே நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### நீதியான விசாரணை நடக்குமா?

பிந்துனுவெவ படுகொலைகள் தொடர்பாக விசாரணை அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு மனித உரிமைகளுக்கான ஆசிய நிலையம் ஜனாதிபதி சந்திரிகாவைக் கேட்டுள்ளது. இதுதொடர்பாக இந்தியாவுக்கான சிறிலங்கா தூதரிடம் அறிக்கை கையளித்துள்ளது.

பிந்துனுவெவ படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டமை குறித்தும் பெரும் கவலை வெளியிட்டுள்ள மனிதஉரிமை மையம் - இந்தப் பாரிய படு கொலைகளுடன் தொடர்புடையவர்கள் என ஒருவரேனும் குற்றவாளி என இனங்காணப்படாமையானது, இலங்கையின் ஜனநாயக அமைப்புகள் குறித்த தமிழ் மக்களின் சந்தேகங்களை மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

பிந்துனுவெவ படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் - தமது விடுதலைக்காக பொலிஸ் இன்ஸ் பெக்டர்கள் சங்க உறுப்பினர்கள் செய்த உதவிகள், பணச் செலவு பற்றியெல்லாம் சொன்னார். ஆனால் கொலையுண்ட இளைஞர்களின் பெறுமதிபற்றி யாரும் சொல்லவில்லையே! இனியாவது நேர்மையான நீதிவிசாரணை நடைபெறுமா? வழக்கைத்தயாரித்தெடுப்பது, வழிநடத்துவது பொலிஸார்தானே! நீதியை எதிர்பார்க்கலாமா?

*வவுனியா* *-க.சந்திரசேகரன்.*

மாணவர் எழுச்சிநாள்

ஆர்.கே.மேனன்

# தமிழீழ மாணவர் எழுச்சி நாளும் தமிழ் மாணவர் பட்ட துன்பங்களும்

ஒரு அமைப்பின் "எழுச்சி" என்பது அந்த அமைப்பின்மீது பலவகைப்பட்ட அடக்குமுறைகள் திணிக்கப்படும்போதுதான் விஸ்வரூபமெடுக்க ஆரம்பிக்கும். அந்த வகையில் எழுச்சி பெற்றதுதான் தமிழீழ மாணவர் எழுச்சிநாளாகும்.


கடந்த 20 தசாப்தங்களாக எமது தமிழ் மாணவர்கள் மீது பலவகைப்பட்ட அடக்குமுறைகள் காலத்துக்குக் காலம் திணிக்கப்பட்டது. இப்படிப்பட்ட அடக்குமுறைகளை சர்வதேச பார்வைக்குத் திருப்பவேண்டும். மாணவர் சக்தியை மாபெரும் எழுச்சி சக்தியாக மாற்றவேண்டும் என்ற அடிப்படையில் தோற்றம்பெற்றதுதான் தமிழீழ மாணவர் பேரவையாகும்.

எமது தமிழ் மாணவர்களின் ஒன்றுபட்ட சக்தியாலும், சிவகுமாரின் அயராத ஆற்றல் நிறைந்த உழைப்பாலும் வலுப்பெற்றதுதான் எமது தமிழீழ மாணவர் பேரவையாகும். இந்தப் பேரவையினால் அனுஷ்டிக்கப்படும் ஒரு எழுச்சிநாளே தமிழீழ மாணவர் எழுச்சிநாளாகும்.

ஒவ்வொரு ஜூன் மாதம் 02 ஆம் திகதியும் கொண்டாடப்படும் இந்த எழுச்சிநாளுக்கான அர்த்தத்தை அனைவரும் அறிந்திருக்கவேண்டியது இன்றியமையாததொன்று.

ஒன்றுபட்ட இலங்கையர்கள் என்கின்ற எண்ணக்கருமாறி - தமிழினம் தனக்கென்று ஓர் தாயக விடிவுப் போராட்டத்தை உருவாக்குவதற்கு பல அடிப்படைக் காரணங்கள் உள்ளன.

சிங்கள அரசியல் அடக்குமுறையினர்களால் உருவாக்கப்பட்ட பல காரணங்களில் ஒன்றுதான் தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்ட பல்கலைக்கழகத் தெரிவுக்கான வெட்டுப் புள்ளியாகும். இறுதி இலக்குகளை அடைவதற்கு தகுதி இருந்தும் அதாவது பல்கலைக்கழகங்களை அடைவதற்கு தகுதி இருந்தும் பல தமிழ் மாணவர்கள் வெட்டுப்புள்ளி எனும் வெருட்டல் செயல்களால் தெருவோரங்களில் அலைந்தார்கள். இதுமாத்திரமல்ல, இந்த வெட்டுப்புள்ளி எனும் அடிப்படையில் உருவான துன்பங்களை தனிப்பட்ட மாணவர்கள் மாத்திரம் சுமக்கவில்லை ஒட்டு மொத்த தமிழினத்தையுமே "கல்வியியல்" எனும் அம்சத்தில் சிங்களப் பேரினவாதம் படுகுழியில் தள்ளியது என்பதற்குச் சான்றாக 1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் பல்கலைக்கழக அனுமதிபெற்ற தமிழ் - சிங்கள மாணவர் விகித அட்டவணை சுட்டிக்காட்டி நிற்கின்றது.



பொன்.சிவகுமாரன் மேஜர் முரளி

1969 தொடக்கம் 1975 வரையான காலப்பகுதிகளில் தரப்படுத்தல், மற்றும் மாவட்ட அடிப்படையிலான இட ஒதுக்கீடு போன்றவற்றின் மூலம் சிங்கள மாணவர்கள் பெற்ற பல்கலைக்கழக அனுமதி இடங்கள் படிப்படியாக அதிகரிப்பதையும், தமிழ் மாணவர்கள் பெற்ற இடங்கள் படிப்படியாகக் குறைவதையும் தரவுகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் மாணவர்களது இந்த வீழ்ச்சிநிலை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த இடங்கள் 1973 ஆம் ஆண்டில் 1117 இலிருந்து 1974 ஆம் ஆண்டில் 1403 ஆக அதிகரித்தபோது, ஏற்பட்டது என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

**கல்வி - பல்கலைக்கழக அனுமதி பெற்ற சிங்கள மாணவர்கள்**
*1969 - 1975*

| | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞான அடிப்படையிலான கற்கை நெறிகள் | 69.7 | 68.0 | 67.0 | 73.1 | 75.4 | 78 |
| பொறியியல் | 51.7 | 55.9 | 62.4 | 72.1 | 78.8 | 83.4 |
| மருத்துவம் | 48.9 | 53.5 | 56.1 | 58.8 | 70.0 | 78.9 |
| கலை (சட்டம் உட்பட) | 88.4 | 88.9 | 92.6 | 91.5 | 86.0 | 85.6 |

**கல்வி - பல்கலைக்கழக அனுமதி பெற்ற தமிழ் மாணவர்கள்**
*1969 - 1975*

| | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞான அடிப்படையிலான கற்கை நெறிகள் | 27.6 | 28.6 | 31.2 | 25.9 | 20.9 | 19.5 |
| பொறியியல் | 48.3 | 40.8 | 34.7 | 24.4 | 16.3 | 14.2 |
| மருத்துவம் | 48.9 | 40.9 | 39.3 | 36.9 | 25.9 | 17.4 |
| கலை (சட்டம் உட்பட) | 7.5 | 7.6 | 4.8 | 6.1 | 10.0 | 10.0 |

இப்படிப்பட்ட தமிழ் மாணவர்களின் துன்பகரமான பல்கலைக்கழக அனுமதிக்கு தடங்கல்களாக இருந்த தரப்படுத்தல் எனும் சிங்கள அரசின் சதி நடவடிக்கை விபரம் அட்டவணையில்-

இப்படியாக தமிழ் மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்றால்மாத்திரமே பல்கலைக்கழகம் புகமுடியும் எனவும், சிங்கள மாணவர்கள் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றாலே பல்கலைக்கழகம் போய்விடமுடியும் என இனவாதக் கொள்கையை கல்வி அமைப்பில் பரவிவிட்டது சிங்கள அரசு.

இப்படிப்பட்ட திட்டங்களால் பல்கலைக்கழகம் சம்பந்தமாக தமிழ் மாணவர்களை ஆக்ரோசமடையச் செய்தது சிங்களப் பேரினவாதம். பல்கலைக்கழக அனுமதியில் மாத்திரம் தமிழ் மாணவர்களை வருத்தும் செயல் நின்றுவிடவில்லை.

சமூகக்கல்வியும் வரலாறும், சித்திரம் போன்ற பாடங்களினூடாக சிங்கள - பௌத்த நாகரிகங்களின், வரலாறு போதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கல்வித்திட்டங்கள் உருவாக்கப்பட்டது. சிங்கள மாணவர்களுக்கு அது அறிந்த ஒரு வரலாறு. ஆனால் தமிழ் மாணவர்களோ சிங்களச் சொற்களைத் தடுமாறித் தடுமாறி உச்சரித்து பரீட்சையில் தவறிழைக்க ஆரம்பித்தனர். இது பள்ளிப் பருவ மாணவர்களுக்கு சிங்களப் பேரினவாதம் செய்த அடுத்த பெரிய சதியாகும்.

**1970/71 ஆம் ஆண்டில் தமிழ் - சிங்கள மாணவர்களிடையே எதிர்பார்க்கப்பட்ட சராசரி மதிப்பெண்கள்**

| கற்கை நெறி | அனுமதிக்கான புள்ளிகள் | |
|---|---|---|
| | தமிழர் | சிங்களவர் |
| பொறியில்துறை பேராதனை | 250 | 227 |
| பொறியியல்துறை கட்டுப்பெத்தை | 230 | 212 |
| மருத்துவத்துறை, பல்மருத்துவம் | 250 | 229 |
| விவசாயம் மிருகவைத்திய உயிரியல் விஞ்ஞானம் | 184 | 175 |
| பௌதிக விஞ்ஞானம் | 204 | 184 |
| கட்டடக்கலை | 194 | 180 |

இவற்றைவிட போராட்ட சூழல்களின் மத்தியில் தமிழ் மாணவர்களுக்குப் பொதுப் பரீட்சைகளை வைத்தலும், பிற்போடலும், இடையிடை கலைத்திட்ட மாற்றங்களை உருவாக்கலும், உயர்கல்வி நிறுவனங்களுடனான தமிழ் மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பத்தை முறியடித்தலும் போன்ற பல சதி நடவடிக்கைகளை தமிழ் மாணவர்களுக்கெதிராக சிங்கள அரசு செய்து வந்தது.

தற்போது புதிய கல்விச் சீர் திருத்தமென்ற பெயரில், சரியான முறையில் வடக்கு - கிழகுப் பாடசாலைகளுக்கு வளங்கள் பகிரப்படாது, இருந்த கல்வி முறையும் போய், புதிய கல்வி முறையும் வளங்களற்ற முறையில் சீர்குலைந்து, மறைமுகமாக தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்து வருகின்றது என்பதை கடந்த வருடப் பெறுபேறுகள் நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் இந்தப் போராட்டத்தால் நசுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் ஒரு சந்ததியின் சரித்திரமே கல்வி ஞானமின்றிக் கவிழப் போகும் நிலை தமிழன் தலைவிதியில் எழுதப்பட்டுவிட்டது. இப்படிப்பட்டநிலை இனியும் தொடரக்கூடாது. "எமது சந்ததி வாழவேண்டும். மாணவர்கள் ஒடுக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். தன்னிகரற்ற தமிழினம் அறிவுச் செழிமையோடு அகிலமுணரத் தலை நிமிர்ந்து வாழவேண்டும், எமக்கெதிராக உள்ள தடைகள் உடைக்கப்பட வேண்டும். சர்வதேசமே எமது உரிமைப் போராட்டத்தின் அர்த்தத்தை இப்போது நீ கண்டு விட்டாய். இனியாவது ஒடுக்கப்படும் எமது தமிழ் மாணவர்களைச் சற்றுத் திரும்பிப் பார்" என்ற அடிப்படையில் ஓங்கிக் குரல் எழுப்பும் தினமே ஜூன் 2 ஆம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சிநாளாகும். இதை உணர்ந்து குரல் கொடுப்பது வரலாறு புரிந்த ஒவ்வொரு தமிழ் மாணவனதும் கடமையாகும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## துலாம்

உங்கள் ராசியின்படி பாக்கியஸ்தானத்தில் இருந்து சனிபகவான் விலகி, கர்மஸ்தானத்தை அடைகிறார். இதனால் பத்தாம் இடம் வலுக்கிறது. ஆகையால் இதுவரை உங்களுக்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். செய் தொழில் மேன்மை அடையும்.

அதேநேரம் புனர்பூச நட்சத்திர சாரத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், இந்த ஆண்டு இறுதி வரை உங்களுக்கு சற்றுக் குறைவான பலன்களையே கொடுப்பார். ஆனால் வருடம் முடிந்த பிறகு இந்த ராசிக்காரரர்கள் சனியாலும், ராகுவாலும் மிகுந்த பலனை அடைவார்கள். கடல் கடந்து செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்தில் சிறுசிறு ஆரோக்கியக் குறைவுகள் ஏற்பட்டாலும் பெரிதாக எந்தவொரு பாதிப்பையும் சனி பகவான் கொடுக்கமாட்டார்.

குரு ஆறாம் அதிபதியாகி 12 இல் அமர்ந்து விபரீத ராஜ யோகத்தைக் கொடுக்கும் நிலையில் இருப்பதால் உங்கள் எதிரிகளின் பலம் செப்ரெம்பர்வரை குறைந்து காணப்படும். பிறகு தங்கள் ராசிக்குப் பெயர்ச்சியாகும் குரு பகவானால் சிறு சிறு மனக்குழப்பங்கள் உண்டாகும். ஆனாலும் பயப்படவேண்டாம். கடுமையான எந்தச் சூழ்நிலையையும் ராகுவும், சனியும் விரட்டி விடுவார்கள். எதிர்பார்த்த நல்ல பலன்களை உங்களுக்கு அள்ளித் தருவார்கள்.

உத்தியோகத்தர்களுக்குப் பொருளாதார நிலைமை சீராக இருக்கும். உங்களின் அனைத்துத் தேவைகளும் பூர்த்தியாகும். விரும்பிய இடமாற்றத்தை அடைவதற்கு முயற்சி செய்யலாம். வேலையில் புதிய நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் ஈடுபடுவீர்கள். மேலதிகாரிகளை அனுசரித்து நடக்கும் மனப்பாங்கு அமையும். அதன் மூலம் பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவை கிட்டும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு முழுவதும் கிடைப்பதால் தைரியமாக அவர்களை நம்பி சில காரியங்களை ஒப்படைக்கலாம்.

வியாபாரிகளுக்கு இது திருப்திகரமான சனிப்பெயர்ச்சி. உங்கள் வியாபாரம் சிறப்பாக நடைபெறும். எதிர்பார்த்த லாபத்தை அள்ளுவீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் தவிடு பொடியாகிவிடுவார்கள். ஆகையால் இந்தக் காலகட்டத்தில் உங்களின் முயற்சிகளைக் கூட்டி, தொழிலை அபிவிருத்தி செய்யுங்கள். உங்களின் பொருட்களை புதிய சந்தைகளுக்கு எடுத்துச்சென்று வியாபாரத்தைப் பெருக்குங்கள். அதில் நல்ல லாபத்தைப் பார்ப்பீர்கள். அதேநேரம் சிறு சிறு விரயங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, சற்றுக் கவனமாக இருக்கவும்.

விவசாயிகளைப் பொறுத்த வரை சனிபகவான் நல்ல வருமானத்தை அள்ளிக் கொடுப்பார். உங்களுடைய லாபத்தைப் பெருக்கி அதிக லாபத்தை வழங்குவார். ஆகையால் புதிய முயற்சிகளை மேற்கொண்டு, எதிர்பார்த்த லாபத்தை அள்ளலாம். அதோடு கால்நடைகளின் மூலமும் உங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். மற்றபடி வெட்டிச் செலவுகளை வெறும் பந்தாவுக்காகச் செய்யாமல், அவசியமான செலவுகளை மட்டும் செய்து கைப்பொருளைத் தக்கவைத்துக் கொள்ளவும்.

கலைத்துறையினருக்குப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் தென்படும். புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள். நினைத்த காரியங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். அதேநேரம் இது அதிகமாக உழைக்கவேண்டிய காலம், அதற்கேற்ற பலன் நிச்சயமாக உங்களைத் தேடிவரும்.

பெண்களுக்கு தெய்வ பக்தி அதிகரிக்கும். வருமானம் பெருகும். சிந்தனைகள் தெளிவடையும். 10 இல் உள்ள சனி பகவான், அதிகமாக உழைக்க வைத்து பலனைத் தருவார். அதேநேரம் திட்டமிட்ட வேலைகளில் எச்சரிக்கையுடன் செயற்படவும். மற்றபடி குழந்தைகளுக்காக அதிகம் செலவுசெய்து மகிழ்வீர்கள். அதோடு இந்தப் பெயர்ச்சியில் நீங்கள் புதிய வீடு, வாகனம் போன்றவற்றையும் வாங்கலாம்.

மாணவமணிகள் கடுமையாக முயற்சிசெய்து கல்வியில் முன்னேறவும். குறிப்பாக வெளிநாட்டுக்குச் சென்று படிக்க விரும்புவோர், அரிய முயற்சிகளுக்குப் பின்பே வெற்றியடைய முடியும். இதனால் உங்கள் பெற்றோருக்கு சற்று செலவுகள் கூடும்.

பரிகாரம் : விஷ்ணு சஹஸ்ர நாமத்தைப் பாராயணம் செய்தல், பெருமாள் கோயிலுக்குச் சென்றுவருதல் போன்றவற்றால் நன்மை அடையலாம்.

# ஆழ ஊடுருவும் அணி பற்றிய தகவல்களாலேயே புலனாய்வுப் பிரிவினர் தாக்கப்படுகின்றனர்!

## 'ஐலன்ட்' பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு—

இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி தொடர்பான விபரங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வெளிக்கொண்டுவரப்பட்டதாலேயே- தற்பொழுது இராணுவ புலனாய்வுப்பிரிவினரை இலக்குவைத்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

இதனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பல முக்கிய தலைவர்கள் மீது வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியினர் பலர் கொல்லப்பட்டு விட்டனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திய பஸ்ஸைத் தாக்குதவற்கு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி திட்டமிட்டிருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியிருந்தது.

எனினும், இக்குற்றச்சாட்டை மறுத்திருந்த முன்னாள் இராணுவத் தளபதியும், இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளருமான ஜெனரல் லயனல் பலகல்ல - ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு இராணுவப் புலனாய்வுப் பணியகத்தினால் ஆபத்து ஏற்படாதென உறுதியளித்து ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தவிசாளர் சரித்த ரத்வத்தவுக்கும், அப்போதைய பொலிஸ் மா அதிபருக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி - இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உருவாக்கியிருந்த ஆழ ஊடுருவும் படையணியினர் தங்கியிருந்த அத்துருகிரிய மிலேனியம் சிற்றி முகாமைச் சோதனையிட்டு, அங்கு தங்யிருந்த ஆழ ஊடுருவும் படையணியைச் சேர்ந்த சிலரையும், அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தது.

இதன்போது ஆழ ஊடுருவும் படையணி தொடர்பான விபரங்களும், அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களும் வெளிச்சத்துக்கு வந்தன.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற உடத்தலவின்ன படுகொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகனான சானுக ரத்வத்த, அத்துருகிரிய முகாமில் மறைந்திருப்பதாக சந்தேகம் தெரிவித்தே, அந்த முகாம் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டு, இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணி தொடர்பான விபரங்களும் வெளியாகின.

இந்த விசேட நடவடிக்கைக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தலைமை வகித்திருந்தார்.

இவ்வாறு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி தொடர்பான விபரங்கள் வெளிச்சத்துக்கு வந்ததாலேயே, அதனுடன் சம்பந்தப்பட்ட பலரையும் விடுதலைப் புலிகள் இலகுவாக இனங்கண்டு கொன்றொழித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், தமக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி திடீரென பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக்கொண்டதும், அத்துருகிரிய இராணுவ மறைவிட இரகசியத்தை வெளிப்படுத்தியதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்ததாகத் தெரிவித்து, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளின்போது, 52 ஆவது நபராகச் சாட்சியமளித்திருந்த சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் தளபதி லெப்ரினன்ட் கேணல் முத்தலிப், ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியில் தான் முக்கியமான பங்கு வகித்திருந்ததாக தமது சாட்சியத்தில் கூறியிருந்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் உருவாக்கப்பட்டிருந்த இந்த ஆழ ஊடுருவும் படையணி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான கேணல் சங்கர் உட்பட பல முக்கிய உறுப்பினர்கள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டிருந்ததுடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதை இலக்காகக் கொண்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது என்றும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமலை புத்தர் சிலை விவகாரம் நீதிமன்ற தீர்ப்பை செயற்படுத்துக

## அரசிடம் தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

திருகோணமலை—

திருகோணமலை திடீர் புத்தர் சிலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பை செயற்படுத்துமாறு அரசுக்கு தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுனாமி அனர்த்த மீளமைப்பு குறித்து கடந்த 2 மாதங்களாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் பொதுக்கட்டமைப்பு முயற்சியை சீர்குலைக்கும் வகையில் திருமலையில் அனுமதியின்றி திடீர் புத்தர் சிலை வைக்கப்பட்டது. இதையடுத்தே தமிழர் தாயகப் பிரதேசம் முழுவதும் கதவடைப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கங்களுக்காக மதச் சின்னங்களைப் பயன்படுத்தி அவற்றை அவமதிக்கக் கூடாது. அதை பெரும்பான்மைச் சமூகத்தின் ஒரு அடையாளமாகவும் பாவிக்கக்கூடாதென்பதுடன் பன்முகச் சமூகமாக இருக்கும் இலங்கையில் இதை அனுமதிக்கவும் கூடாது.

திருமலை திடீர் புத்தர் சிலை விவகாரத்தில் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பை எவ்வித பாரபட்சமின்றி அரசு செயற்படுத்த வேண்டும்.

வன்முறை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது போன்ற அச்சுறுத்தல்கள் குறித்து நாம் வருத்தப்படுகிறோம்.

அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சுமுகமான அமைதிவழித் தீர்வை அனைத்து சமூகம் மற்றும் மதத் தலைவர்களும் மேற்கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் - கொழும்பிலும், வடக்கு - கிழக்கிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் படுகொலைகள் குறித்தும் நாம் கவலைகொள்கிறோம். இராணுவ புலனாய்வுப் பிரிவு கட்டளை அதிகாரி முத்தலிப் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டுவரும் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். இருப்பினும், ஆளும் அரசுக்குள்ளேயே இது தொடர்பான முரண்பாடுகள் இருப்பது குறித்து நாம் கவலைப்படுகிறோம்.

நாடு தற்போது முக்கியமான கட்டத்தில் உள்ளது. அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அமைதிப் பேச்சுகளை நடைமுறையில் செயற்படுத்த முன்வரவேண்டும். இதற்கு முதற்படியாக பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

இது குறித்து குற்றச்சாட்டுகளை அனைத்துத் தரப்பினரும் தவிர்த்துவிட்டு இவை தொடர்பாக மக்களிடம் நம்பிக்கையைப் பெறும் வகையில் விளக்கமளிக்கும் பணியில் அனைத்துத் தரப்பினரும் ஈடுபட வேண்டும். அனைத்துத் தரப்பினரதும் முயற்சியிலான அமைதிப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சமாதானப் பேரவை விரும்புகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசு அமுல்படுத்த வேண்டும்

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் கோரிக்கை

கொழும்பு—

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இலங்கை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் உட்பட பலர் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டு வருவதாகவும் - எனவே, இதனை தடுக்கும் நோக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீண்டும் அமுல் படுத்தவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள இலங்கை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கத்தின் தலைவர் டால் குணரட்ன, பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அச்சத்துடனேயே தமது கடமைகளை செய்யவேண்டி ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஜனாதிபதியும், பொலிஸ் மா அதிபரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் கொலைகள் தொடர்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், நோர்வே அனுசரணையாளர்களும் குருடர்களாகச் செயற்பட்டு வருவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கத்தின் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஜெயரட்ணம் பற்றி பேசப்படுவதில்லையெனவும், போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் பல இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளை கொலை செய்திருப்பதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# பாகிஸ்தானுடன் தடையில்லா வர்த்தகம் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் அமுல்!

கொழும்பு—

இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென இரண்டு நாடுகளும் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற பாகிஸ்தான் - இலங்கை கூட்டுப் பொருளாதாரக் குழுவின் கூட்டத்திற்குப் பின்னர் இது அறிவிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களை அமைச்சர் ஜெயராஜ் பொர்னாண்டோ புள்ளே, பாகிஸ்தான் அமைச்சர் ஹமாயூன் அக்தர்கான் ஆகியோர் பரிமாறிக்கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இருதரப்பு தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. விவசாயம், தோட்டக்கலை, உணவு பதப்படுத்தல் ஆகிய தொழில்களில் முழு ஒத்துழைப்பு அளிக்க பாகிஸ்தான் உறுதியளித்தது.

மேலும், மனிதவள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் துறைமுக, கப்பல் போக்குவரத்து துறைகளில் இரு தரப்பினரும் இணைந்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டது.

தடையில்லா வர்த்தகத்தைச் செயற்படுத்துவதன் ஒரு பகுதியாக இரு நாட்டுக்குமிடையேயான கப்பல் போக்குவரத்து குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் மூலம் இலங்கையின் தேயிலை, இறப்பர், தென்னை உட்பட 206 பொருட்களுக்கு பாகிஸ்தானில் வரிவிலக்கும், பாகிஸ்தானின் தோடம்பழங்கள், பாசுமதி அரிசி, பொறியியல்துறை பொருட்கள் உட்பட 102 பொருட்களுக்கு இலங்கையில் வரிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளன.




அச்சுவேலி பத்தமேனி

அருள்மிகு தீர்த்தாங்குளப் பிள்ளையார் தேவஸ்தானம்

**தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம் - 2005**

06.06.2005 அன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தாங்குளப் பிள்ளையாருக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. அத்தருணம் அடியார்கள் தீர்த்தோற்சவ வைபவத்திற்கு வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

| | | | |
|---|---|---|---|
| காலை | 7.00 மணிக்கு அபிஷேகம் | காலை | 10.00 மணிக்கு மகா யாக கும்பாபிஷேகம் |
| காலை | 7.30 மணிக்கு மூலஸ்தான பூஜை | நண்பகல் | 12.00 மணிக்கு அன்னதானம் நடை[illegible]றும். |
| காலை | 7.45 மணிக்கு தம்பபூஜை | மாலை | 5.00 மணிக்கு மூலஸ்தான பூஜை |
| காலை | 8.30 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை | மாலை | 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை |
| காலை | 9.00 மணிக்கு தீர்த்தோற்சவம் தேவஸ்தான கேணியில் | மாலை | 6.00 மணிக்கு அவரோகணம் (கொடியிறக்கம்) |
| | | காலை | 7.00 மணிக்கு மௌனத் திருவிழா |

**மங்கள இசை** - திரு.வி.இராமையா புதல்வர்கள் ஆவரங்கால், திரு.றீ.பாலேந்திரா குழுவினர் உடுப்பிட்டி

சந்திரா தொலைத்தொடர்பகம்
யாழ்.வீதி, உடுப்பிட்டி
T.P - 0602212781, 0602212714, 0212263524

உபயகாரர்கள் 10 ஆம் திருவிழா தீர்த்தோற்சவ உபயகாரர்கள் சார்பில் திரு.செ.சந்திரமூர்த்தி சகோதரர், திரு.செ.புவனேந்திரராசா சகோதரர், திரு.செ.சிவலிங்கராசா குடும்பம், திரு.க.தவராசா, திரு.சு.சித்திவிநாயகம் சகோதரர், திரு.கா.வாகீஸ்வரன்

(சி-4188)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அனுராவா அல்லது மகிந்தவா?

## சுதந்திரக் கட்சிக்குள் பனிப்போர்

கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அநுரா பண்டாரநாயக்கவா அல்லது மகிந்த ராஜபக்ஷவா என்பது குறித்து கட்சிக்குள் இன்னொரு பனிப்போர் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவருமான மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்குவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பெரும் பகுதியினர் ஆர்வமாக உள்ளனர். ஜே.வி.பியும் இதில் அக்கறை காட்டி வருகிறது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ - தனது தம்பியாரான அநுரா பண்டாரநாயக்கவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலான ஜனாதிபதி வேட்பாளராக பிரேரிப்பதற்கு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறார்.

அதற்காக தனது செல்வாக்கு மற்றும் அதிகாரங்களையும் அரச, அமைச்சு மட்டத்தில் மேற்கொண்டு வருகிறார் என்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

பண்டாரநாயக்க குடும்பத்திடமே ஜனாதிபதி பதவி இருக்கவேண்டுமென்ற கொள்கையுடன் அநுராவுக்கு ஆதவான பிரசாரத்தில் ஜனாதிபதி தீவிரமாக இறங்கியிருப்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள்ளேயே முறுகலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் தருணத்துக்கு ஏற்றவாறு எத்தனையோ தடவைகள் கட்சி மாறிய அநுரா, அவ்வாறு ஜனாதிபதிக்கு எதிரான கட்சியிலிருந்தபோது ஜனாதிபதியையும் அவரது கட்சியையும் காரசாரமாக விமர்சித்தவர்.

அப்படியிருக்கையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய பங்கும் பணியும் அளப்பரியவை.

இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாத ஜனாதிபதி - கட்சிக்காக உழைத்த எத்தனையோ பேர் இருக்க - புதிய அரசு பதவியேற்ற போது - அநுராவுக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்தார்.

இவையெல்லாவற்றையும் பொறுக்கலாமென்றால் தற்போது ஜனாதிபதி வேட்பாளராகவும் அநுராவா? அது நடக்காதென்று சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர்.

ஆனால், இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் அநுராவுக்கு ஆதரவாக அரச பிரசார இயந்திரத்தைப் பயன்படுத்தவும் துணிந்து விட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அதேநேரத்தில் மக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்குக் கூடுதலாக அநுராவின் செல்வாக்கைப் புகுத்தவும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

# பொதுக்கட்டமைப்பை ஆதரிப்போர் தேசத்துரோகிகளாம்!

## தேசிய பிக்குகள் முன்னணி கூறுகிறது

கொழும்பு —

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் அனைவரையும் தேசத்துரோகி பட்டியலில் தாம் உள்ளடக்கியுள்ளதாக தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொதுக்கட்டமைப்பை நிறுவுவதைத் தடுப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் கல்வெல்கல சந்தாலோகதேரர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்பின் மூலம் சர்வதேச நிதிகளைப் பெற்று தனிநாடான ஈழராச்சியத்திற்கு செல்லவே விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்.

இதற்கு உடன்போகும் அனைவரும் எதிர்காலத்தில் தேசத்துரோகிகள் பட்டியலில் உள்ளடக்கப்படுவர்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக முன்னின்று செயற்பட தேசிய பிக்குகள் முன்னணி முடிவுசெய்துள்ளது. கிராமங்கள் நகரங்கள், விகாரைகள் தோறும் இதற்கான பிரசாரங்களில் ஈடுபடப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர

# புலிகளின் அலுவலகத்துள் இராணுவத்தினர் தேடுதல்!

மட்டக்களப்பு —

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியற்துறை அலுவலகத்துக்குள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு படையினர் தேடுதல் நடத்தினர்.

மட்டக்களப்பு - அரசடிச்சந்தியிலுள்ள இந்த அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிமுதல் 12.30 மணி வரை இராணுவத்தினர் தேடுதல் நடத்த முற்பட்டபோதிலும் அங்கிருந்த போராளிகள் ஐந்து பேரும் அதற்கு இடமளிக்கவில்லை.

இராணுவத்தினர் தனியாக வந்து சோதனையிட அனுமதிக்க முடியாது. அப்படியானால் கண்காணிப்புக்குழு முன்னிலையில்தான் சோதனையிட முடியுமென்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் அங்கு வந்த இராணுவத்தினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதுகுறித்து விடுதலைப் புலிகளால் கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து கண்காணிப்புக்குழுவினர் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

பொலிஸார் சகிதம் கண்காணிப்புக்குழுவினர் அங்கு வந்ததை அடுத்து இராணுவம் வெளியே நிற்க பொலிஸாரால் புலிகளின் அலுவலகம் சோதனையிடப்பட்டது.

தமது அலுவலகம் மீது தொடரும் இத்தகைய சோதனை நடவடிக்கை குறித்து விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் தயா மோகன் இதுபற்றிக் கூறுகையில் - தமது போராளிகள் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான சதிமுயற்சி இது வென்று குறிப்பிட்டார்.

## ரெலோ அலுவலகத்திலும் படையினர் தேடுதல்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரிலுள்ள ரெலோவின் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 11.45 முதல் 12.30 வரை இராணுவம், பொலிஸ் மற்றும் ராசிக் குழு, இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்தோர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது மாவட்டச் செயலகத்தில் எட்டுப் பேர் தங்கியிருந்ததாகவும், அங்குவந்த இராணுவத்தினர் அலுவலகத்தின் பல இடங்களிலும் துருவித் துருவி தேடுதலை மேற்கொண்டதாகவும் ரெலோவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## புளொட் இராணுவ பொறுப்பாளர் கைது!

கொழும்பு —

ஊடகவியலாளர் டி சிவராம் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக புளொட் அமைப்பின் இராணுவப் பொறுப்பாளர் பீற்றரை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்களை மேற்கோள்காட்டும் இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இவர் ஈ.பி.டி.பியுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்பவர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## மார்மமாக உயிரிழந்த இருவரின் சடலங்கள் யாழ்.வைத்தியசாலையில்!

அனலை தீவு கண்ணகை அம்மன் இறங்குதுறைப் பகுதியில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து ஊர்காவற்துறைப் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவருடைய சேட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஆவணத்தில் கணேசன் கிருஷ்ணமூர்த்தி (வயது 39) எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அடையாளம் காண்பதற்காகவும், மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காகவும் சடலம் போதனா வைத்தியசாலைப் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தூர் வாதரவத்தை பகுதியில் கழுத்தில் சுருக்கிடப்பட்டிருந்ததாக தெரிவித்து தங்கராசா சந்திரகுமார் (வயது 44) என்பவருடைய சடலத்தை போதனா வைத்தியசாலையில் கோப்பாய் பொலிஸார் நேற்றிரவு ஒப்படைத்தனர்.

சடலத்தின் இடுப்பு பகுதியில் இரத்தக்கசிவு காணப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## புலிகளின்...

ணுவம் ஏற்கவில்லை. அது நிராகரித்தே வந்தது.

இந்த நிலையிலேயே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இத்தகைய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இந்த வருத்தத்தை அரசுக்குத் தெரிவித்துள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஓல்ஸ்டெட்டிர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் இந்த அடாவடியான போக்கினால் நேற்று ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக மட்டக்களப்பிற்குச் செல்லவிருந்த 30 உறுப்பினர்களைக் கொண்ட புலிகள் அணியின் பயணம் ரத்துச் செய்யப்பட்டது.

அத்தோடு இன்று மேற்கொள்ளவிருந்த பயணத்தையும் விடுதலைப் புலிகள் ரத்துச் செய்துவிட்டதாக புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளான கேணல் சொர்ணம், கேணல் பானு ஆகியோருக்கான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ள கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அரச தரப்பு மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## புரிந்துணர்வு...

என்ன இருந்தாலும் நாம் ஒரு நாடாக செயற்படவேண்டும் பாதுகாப்பு படைகளின் பொறுப்பு இந்த நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாப்பதாகும் எனத் தெரிவித்தார்.

## கடற்படைத்...

பேரிலேயே வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்று இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தியாவில் தங்கியிருக்கும்போது இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மற்றும் கடற்படைத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மோட்டார்...

களை இனங்கண்டு ஒப்படைக்குமாறும், மருத்துவ அறிக்கையினை மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதன் பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிகமாக பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞர் கன்னாதிட்டிப் பகுதியில் ஓட்டோ சாரதியாகப் பணியாற்றுபவர் என்றும் கூறப்படுகிறது.

## குருநகர்...

போன்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அவர்களின் பயணப் பொதியில் ஜம்பெட்டா வீதி முகவரி ஒன்று இருந்ததாகவும் அந்த முகவரிக்குச் சென்ற பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அங்கிருந்த இரு பெண்களை விசாரணைகளுக்காக அழைத்துச் சென்றதாகவும் தெரியவருகிறது. படுகொலை செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்த பிரான்ஸிஸ் டெனீசியஸ் (வயது 25), தேவதாசன் இமானுவேல் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜம்பட்டா வீதியிலிருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பெண்ணும் குருநகரைச் சேர்ந்தவர் என்றும் இவர் இரு தினங்களுக்கு முன்னரே கொழும்புக்கு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசசார்பு...

கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுக்குச் சார்பான அரசியல் கட்சியொன்றே சிவராமைக் கொலை செய்துள்ளது. இந்தக் கொலையுடன் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் இன்னொரு அரசியல் கட்சிக்கும் தொடர்பிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் கைது செய்யும்வரை பொலிஸார் அந்த விடயத்தை இரகசியமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கொலையாளிகள் விட்டுச்சென்ற ஒரு தடயமே இந்தக் கொலை தொடர்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு பாரியளவில் பொலிஸாருக்கு உதவியுள்ளது என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## திருமலை - சம்பூரிலும்...

கள் விமானத்தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியாகக இருக்கக்கூடும். இதுகுறித்து கடந்த மாதம் இராணுவப் புலனாய்வுத்துறை அரசுக்குத் தகவல் அனுப்பியிருந்தது.

இந்த விமான ஓடுபாதை கட்டப்பட்டு வருவது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் இறுதியான முடிவெதையும் கூறவில்லை.

விமானப்படையின் ஆளில்லா வேவு விமானங்கள் மட்டுமே அந்தப் பகுதி துப்பரவாக்கப்பட்டுவருவதை உறுதி செய்திருக்கின்றன. அந்தப் பிரதேச மக்கள் மூலம் விடுதலைப் புலிகள் அப்பகுதியில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டு வருவதை உறுதிசெய்துள்ளதை அறிகிறோம்.

லொறிகளில் சிமெந்தும் இரும்புகளும் இறக்குவதை சிலர் பார்த்துள்ளனர். நூற்றுக்கணக்கான லொறிகளில் கட்டுமானப் பொருட்கள் - சம்பூரை அண்டியுள்ள மொத்த விநியோகஸ்தர்களிடம் கொள்வனவு செய்ய உத்தரவு கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்த விமான ஓடுபாதை திருகோணமலையில் அமைக்கப்பட்டுவிட்டால் விடுதலைப் புலிகளின் இராணுவ நகர்வுகள் அனைத்தும் திருமலையை நோக்கியதாகவே இருக்கும். இதன் மூலம் தமிழீழத் தனியரசின் தலைநகராக திருகோணமலையை அவர்கள் பிரகடனப்படுத்துவார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் சம்பூர் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்த விடுதலைப் புலிகள், இப்பாதுகாப்பு நகர்வுகள் அனைத்தும் திருகோணமலையை நோக்கியதாக இருக்குமாறு அமைத்தனர்.

இந்த விமான ஓடுபாதை தொடர்பான செய்தி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால் கிளிநொச்சியையும் திருகோணமலையையும் வான் வழியே விடுதலைப் புலிகள் இணைக்கக்கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தம்மை வலுப்படுத்திக் கொண்டுள்ளனர் என்றும் -

அமெரிக்கா, சுவிற்சர்லாந்து விமான நிறுவனங்களில் பொறியியலாளர்களாகக் கடமையாற்றும் தமிழர்கள் இருவர் மூன்று வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க வழியாக கொழும்பு சென்று ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக கிளிநொச்சி சென்று சுமார் இரண்டு வாரங்களாக அங்கு தங்கியிருந்தனர் என்றும் -

ஆனால், குறிப்பிட்ட இரு பொறியியலாளர்களும் இலங்கையை விட்டுச் சென்ற பின்னர்தான் அவர்களின் வருகை பற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த உயர்தர மாதிரி பரீட்சை வினாத்தாள் - 2005

## வே.கருணாகரன் பொருளியல் வினா - விடை

1. நீண்ட கால உள்நாட்டு போரினாலும், சுனாமி அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் மே 2005 இல் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கண்டி மாநாட்டில் சர்வதேச சமூகம் 3 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க உறுதியளித்துள்ளது.
இத்தகையதொரு நடவடிக்கை பின்வரும் மாறிகளை (Variables) எவ்வாறு பாதிக்குமென சுருக்கமாக விளக்குக.

i நாணய மாற்று வீதம் (ஐக்கிய அமெரிக்க டொலரின்படி உள்நாட்டு நாணயத்தின் வெளியகப் பெறுமானம்)
ii சென்மதி நிலுவை
iii அரசாங்க பட்ஜெட் (வரவு - செலவுத் திட்டம்)
iv சந்தை வட்டி வீதம் (Market interest rates)
v உண்மை மொத்த வெளிநாட்டு உற்பத்தி (GDP)

i நாணய மாற்று வீதம் மீதான பாதிப்பானது;
வெளிநாட்டு உதவியும் கொடைகளும் கொடுக்கப்படுவதுடன் தொடர்புபடுகிறது.
⌘ நாடு வெளிநாட்டு நாணயங்களின் தேறிய உட்பாய்ச்சலை எதிர்கொள்ளும்
⌘ இதன் விளைவாக வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் (Forex market)
⌘ டொலரின் மேலதிக நிரம்பல் அல்லது ரூபாவின் மேலதிக கேள்வியில் ஒரு அதிகரிப்பு ஏற்படும்.
⌘ இது டொலரின் பெறுமதித் தேய்வுக்கு அல்லது இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வுக்கு இட்டுச்செல்லும்.

ii சென்மதி நிலுவை மீதான பாதிப்பு;
⌘ உதவியின் கீழான மூலதன மாற்றல்களதும் சலுகைக் கடன்களதும் செல்வாக்கானது மூலதனக் கணக்கிலும், நிதியியல் கணக்கிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.
⌘ அலுவல் சார் கணக்குகளிலான முன்னேற்றம் நடைமுறை மாற்றலினூடாக நடைமுறைக் கணக்கில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.
⌘ இவற்றின் பிரகாரம் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையில் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஏற்படும்.

iii அரச வரவு செலவுத் திட்டம் மீது;
⌘ புனரமைப்பு புனர்வாழ்வு வேலைக்கு கிடைக்கும் நிதியானது அரச வரவு செலவுத் திட்டம் மீதான சுமையைக் குறைக்கும்.
⌘ தாங்கிக்கொள்ள முடியாத மட்டத்திலிருக்கும் அரச கடன்களை விடுவிப்பதற்கு
⌘ தனது வருமானங்களை அரசு பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.
⌘ இத்தகைய முன்னேற்றமானது அரசின் கடன் படு தேவையைக் குறைக்க உதவும்.
⌘ புனரமைப்பு, புனர்வாழ்வு செலவுகளால் நடைமுறைச் செலவு அதிகரிப்பும், மூலதனச் செலவுகளும் அதிகரிப்பதால் நடைமுறைக் கணக்கிலும், மூலதன கணக்கினூடாக மொத்த ரீதியிலும் பற்றாக்குறைகள் அதிகரிக்குமாயினும் அது இத்தகைய வெளிநாட்டு உதவி கிடைப்பதனால் சுமையாக அமையாது. உள்நாட்டு கடன்படல் குறையும். வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியும். இவற்றால் வட்டி வீதம் குறைதல், தனியார்துறை முதலீட்டுக்கு போதிய நிதி கிடைத்தல் போன்ற சாதக நிலைகளை உருவாக்கும்.
⌘ இவற்றின் பிரகாரம் எந்தவொரு நிலைமையிலும் வெளிநாட்டு நிதிகள், அரச வரவு செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

iv சந்தை வட்டி வீதங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் பின்வரும் இரு காரணிகளுடன் தொடர்புபட்டது.
1. வெளிநாட்டு செலாவணியின் தேறிய உட்பாய்ச்சலானது நிதிச் சந்தையில் திரவத்தன்மையை (நிதி நிரம்பலை) அதிகரித்தல்
2. அரசின் கடன்படுதலுக்கான அழுத்தம் குறைவதனால் நிதிக்கான கேள்வி அழுத்தம் குறைதல்
இவ்விரு காரணிகளின் இணைந்த விளைவாக மத்திய வங்கி தலையிடாத பட்சத்தில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும்.

v மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
⌘ அகதி முகாம்களில் உள்ள மக்களின் புனர்வாழ்வானது அவர்களை பொருளா தார நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்யும்.
⌘ புனர்வாழ்வும், புனரமைப்பும் புதிய பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்கும்.
⌘ இத்தகைய அபிவிருத்தியின் அனுகூலங்கள் பொங்கியெழுந்து முழுப் பொருளாதாரத்திற்கும் பரவி அதன் விளைவாக ஒட்டுமொத்தமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஒரு விரிவாக்கம் ஏற்படும்.

2. அண்மைக்காலத்தில் இலங்கை மத்திய வங்கி மீள் கொள்வனவு வீதம் (Repo rate), நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் (Reverse repo rate) என்ற தனது கொள்கை வட்டி வீதங்களை குறைத்து வந்துள்ளது. இதற்கமைய 2000 இன் தொடக்கத்தில் முறையே 9%, 13% களுடன் ஒப்பிடும்போது 2003 இறுதியில் 7%, 8.5% ஆக அமைந்தன.

i மீள் கொள்வனவு வீதம், நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக
ii இவ்விகிதங்கள் ஏன் கொள்கை வட்டி வீதங்கள் என அழைக்கப்படுகின்றன?
iii கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு, வர்த்தக வங்கிகளின் நடவடிக்கைகளின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்துமென நீர் நினைக்கிறீர்?

i ⌘ மீள் கொள்வனவு வீதம்
மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள், ஆவணங்களில் வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமது மிகை நிதியங்களை முதலீடு செய்யக்கூடிய வீதமாகும்.

⌘ நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம்
திறைசேரி உண்டியல்களையும், ஆவணங்களையும் பிணையாக வைத்து வர்த்தக வங்கிகளும், முதனிலை வணிகர்களும் மத்திய வங்கியிலிருந்து நிதி பெறக்கூடிய வீதமாகும்.

ii கொள்கை நோக்கங்களை அடைவதற்காக இந்த வீதங்களைப் பாவித்து சந்தை வட்டி வீதங்களில் மத்திய வங்கி செல்வாக்குச் செலுத்துவதால் இவை கொள்கை வீதங்கள் என அழைக்கப்படுகின்றன.
iii ⌘ சந்தை வட்டி வீதங்களைக் குறைக்கும். அது மெய் வட்டி வீதத்தை குறைக்குமாயின் சேமிப்பை ஊக்கமிழக்கச் செய்யும்.
⌘ வட்டி வீத வீழ்ச்சி கடனுக்கான கேள்வியை அதிகரிக்கும்.
⌘ சேமிப்பு குறைதல், கடன் கேள்வி அதிகரிப்பு இரண்டும் சேர்ந்து வங்கி முறைகளில் திரவத்தன்மை பிரச்சினையை உருவாக்கும்.
⌘ வங்கி சேமிப்பை கவர நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கும்.

ளii பணவீக்கம் பின்வரும் மாறிகளை (Variables) எவ்வாறு பாதிக்குமென சுருக்கமாக விளக்குக?
(அ) உண்மை வட்டி வீதம் (Real rate in interest)
(ஆ) வீட்டுச் சேமிப்புக்கள் (House hold savings)
(இ சுயேச்சையாக மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதம்

i விலைச் சுட்டெண் ஒன்றால் அளவிடப்படும் பொது விலை மட்டத்தில் ஏற்படும் பொது விலைமட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பணவீக்கம் ஆகும்.
இலங்கையிலுள்ள பணவீக்க அளவீடுகளாவன;
1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI)
2. இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் (SLCPI)
3. கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் (CDCPI)
4. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண் (GCCPI)
5. மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (WPI)
6. மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி (Implicit GNP Deflator)

ii (அ) பணவீக்கத்திற்கேற்ப பெயரளவு வட்டிவீதம் சரிசெய்யப்படாவிட்டால் உண்மை வட்டிவீதம் வீழ்ச்சியடையக்கூடும்.
(ஆ) பணவீக்கம் பணத்தின் மெய்ப் பெறுமதியை வீழ்ச்சியடையச் செய்யும். அதன் பிரகாரம் வீட்டுத்துறையினர் பணவீக்கத்திற்கு எதிராக தமது நுகர்வைக் குறைக்காவிட்டால் வீட்டு சேமிப்புக்கள் குறைவடையும்.
(இ) பணவீக்கத்தினால் இறக்குமதி அதிகரிப்பதனாலும் ஏற்றுமதி குறைவதனாலும் வெளிநாட்டு நாணயங்களுக்கு மிகைக் கேள்வி தோன்றும். அது நாணய மாற்றுவீத தேய்வுக்கு (Depreciation) இட்டுச் செல்லும்.

4. i வர்த்தக வங்கிகள் தமது வைப்பாளர் பணத்தை இலாபம், திரவத்தன்மை என்ற இரு முரண்பாடான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வகிப்பதாகக் கூறப்படுகிறது. இவ்விரு நோக்கங்களும் ஏன் தம்மிடையே முரணுடையன என்பதை விளக்குக?
ii வர்த்தக வங்கிகள் தமது குறுகியகால திரவத்துவ தேவைகளை (Liquidity requiements) எவ்வாறு நிவர்த்தி செய்யப்படும் என்பதை விளக்குக?
⌘ சொத்து முகாமைத்துவம் - குறுகிய கால சொத்துக்களைக் கையாளுதல்
⌘ பொறுப்பு முகாமைத்துவம் - குறுங்கால கடன்களைப் பெறுதல்

5. i மத்திய வங்கியின் முக்கிய பொறுப்பு விலை உறுதிநிலை, நிதித்துறை உறுதிநிலை என்பவற்றை பராமரிப்பதாகும் (Maintain) இவ்விரு பொறுப்புக்களின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.
ii இவ்விரு பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கி எடுக்கும் நடவடிக்கைகளை வெவ்வேறாக குறிப்படுக.
iii ஆக்கபூர்வமான நாணய முகாமைத்துவத்திற்கு மத்திய வங்கி சுதந்திரம் ஒரு முக்கிய தேவையாக கருதப்படுகிறது. மத்திய வங்கி சுதந்திரம் என்பதால் விளங்கப்படுவது யாது என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்துக.
i ⌘ விலையுறுதிப்பாடு என்பது எந்தத்திசையிலாவது விலைகள் அசைவதை கட்டுப்படுத்தலை பொதுவாக குறிக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் நுகர்வோர், உற்பத்தியாளர் இருவரும் எதிர்கால நடவடிக்கைகளை மிகச்சரியாக திட்டமிடமுடியும் இது சமூகத்தேர்வுகளின் பிரகாரம் வங்கிகளின்

திறமையான ஒதுக்கீட்டுக்கு உதவுகிறது.

- நிதியியல் துறை திறமையான கொடுப்பனவுக்கும் தீர்ப்பனவுக்கும் வசதி செய்து கொடுக்கின்றது. எவ்வாறாயினும் நிதிமுறைமை நீடித்திருப்பது என்பது அவற்றின் மீதான மக்களின் நம்பிக்கையில் தங்கியுள்ளது.
- இவற்றின் பிரகாரம் விலை உறுதிப்பாடு, நிதியியல் துறை உறுதிப்பாடு ஆகிய இரண்டும் பொருளாதாரத்தின் திறமையான தொழிற்பாட்டுக்கு முக்கியத்துவமுடையதாகின்றது.

ii விலை உறுதிப்பாடு:

- மத்திய வங்கி தொடர்ச்சியாக விலை அசைவைக் கண்காணித்து வருகிறது. அத்துடன் அண்மிய எதிர்காலத்தின் விலை அசைவு பற்றி எதிர்வுகூறுகிறது. விலைத்தளம்பல்கள் பெரும்பாலும் மொத்தக் கேள்வியின் தளம்பல்களுடன் தொடர்புடையதாக இருப்பதன் காரணமாக மத்தியவங்கி பொருளாதாரத்திற்கு கிடைக்கக்கூடிய பணத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. அதன்மூலம் செலவீடுகளை ஒழுங்குபடுத்தி விலை உறுதிப்பாட்டை ஏற்படுத்துகிறது.

- நிதித்துறை உறுதிப்பாடு என்பது முதல் நிலையில் வங்கிமுறையின் நிதிப்பலத்தில் தங்கியுள்ளது. சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான சமமின்மை நிதிப்பலத்திற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே மத்திய வங்கி ஒழுங்குபடுத்துதல் என்ற தகுதியில் வர்த்தக வங்கிகளை மேற்பார்வை செய்துகண்காணிப்பதன் மூலம் நிதிமுறைமையை பராமரிக்கின்றது.

iii - மத்திய வங்கியின் சுதந்திரம் என்பது தேவைப்படும்போது நாணயக் கொள்கைக் கருவிகளை உபயோகிப்பதற்கு சுயாதீனமுடையதாக இருப்பதைக் குறிக்கிறது.

- சரியான பாதையில் பொருளாதாரம் செல்வதற்கு சூழ்நிலைக்கு ஏற்ப செயற்திறன் வாய்ந்ததாக கொள்கை கருவிகளை மத்திய வங்கி உபயோகிப்பது முக்கியமானது. அதன் பிரகாரம் செயற்திறன் வாய்ந்த நாணயக் கொள்கைகள் மூலம் கிடைக்கும் பணத்தின் அளவையும், விலையையும் வழிப்படுத்த மத்தியவங்கிக்கு சுதந்திரம் அவசியமானதாகும்.

6. தன்னிச்சையான (Voluntary) வேலையின்மை தன்னிச்சையற்ற வேலையின்மை (InVoluntary) என்பவற்றை வேறுபடுத்துக.

தன்னிச்சையான வேலையின்மை

தொழிலாளர் தாமாக விரும்பி வேலையற்றுருத்தல் உதாரணம்
வேலையற்றோருக்கான கொடுப்பனவை பெறுதல் ஊக நோக்கம்
முன்னெச்சரிக்கை நோக்கம் அதிக கூலிபெற விரும்புதல் போன்றவற்றால் வேலையின்றி இருப்பது.

தன்னிச்சையற்ற வேலையின்மை

தற்போதைய சம்பளத்தில் வேலைசெய்ய விரும்பினாலும் வேலைகிடைக்காத நிலையைக் குறிக்கும்
கெயின்சின் கருத்துப்படி மொத்தக்கேள்வி குறைவதால் ஏற்படும் வேலையின்மை இதுவாகும்.
சுதந்திரமான சந்தைச் சக்திகளால் சரிசெய்ய முடியாதது.

இ

## புலிகளுடன் மட்டும் பேசி

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

கொழும்பு —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்தி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டால், அதற்கெதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாடாளுமன்றுக்குப் பொறுப்புச் சொல்லாமல், நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தப்படாமல் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குச் சமனான உரிமைகள் வழங்காத எந்தவொரு கட்டமைப்பிற்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன்படமாட்டாது.

இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளின் அழுத்தங்களினால் அவர்கள் வழங்கியுள்ள உதவித்தொகையை செலவுசெய்து புனர்நிர்மாணப் பணிகளை நிறைவேற்றுவதற்கு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டியது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குமே தவிர - புலிகளை புனர்நிர்மாணம் செய்ய அல்ல. வடக்கு - கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவானோர் முஸ்லிம்கள் என்பதால் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## சண்டிலிப்பாய் யுவதி கொழும்பில் கைது!

கொழும்பு - கொட்டாஞ்சேனை பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினாரெனத் தெரிவித்து, யுவதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தியாகராஜா வீதி - சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லையா ருசாசினி (வயது 23) என்ற யுவதியே கைது செய்யப்பட்டவராவார்.

கொட்டாஞ்சேனையிலுள்ள சென். லூயிஸ் தேவாலயத்திற்கு முன்பாக இவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகவும், இதனை அடுத்து இவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் இதுகுறித்து கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை - கட்டைப்பறிச்சானில் இருவர் ராணுவத்தினரால் கைது!

திருகோணமலை —

திருகோணமலை - கட்டைப்பறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியில் வைத்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரும் மற்றும் பொதுமகன் ஒருவரும் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாக படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவிடுதலைப் புலிகளின் உறுப்பினர் மட்டக்களப்பு - கரடியனாற்றைச் சேர்ந்த அன்பழகன் (வயது 22) எனவும் - பொதுமகன் இறால்குழி - மூதூரைச் சேர்ந்த ரி.யோகேஸ்வரம் (வயது 31) எனவும் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் ஆயுதங்கள் தொடர்பான புத்தகங்களுடன் மோட்டார் சைக்கிளில் சம்பூருக்குச் சென்று கொண்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக மூதூர் பொலிஸாரிடம் இவர்களை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## படையினருக்கு

# மரக்கறி விநியோகிக்கும் கன்ரர் திருமலையில் தீயிட்டு எரிப்பு!

திருகோணமலை —

திருகோணமலை - உவர்மலைப் பகுதியில் - நேற்றுமுன்தினம் இரவு படையினருக்கு மரக்கறி விநியோகிக்கும் வியாபாரிக்குச் சொந்தமான கன்ரர் வாகனம் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது - உவர்மலைப் பகுதியில் சென்றுகொண்டிருந்த இந்த கன்ரரை இரவு 7.30 மணியளவில் வழிமறித்த நால்வர் அதற்குத் தீவைத்து எரித்தனர்.



திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் வியாபாரி ஒருவருக்குச் சொந்தமான வாகனமே இதுவென்றும் இது படையினருக்கு மரக்கறி விநியோகிக்கச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

# மேல் மாகாண முதல்வரை பதவி விலக ஆலோசனை!

## ஜனாதிபதி சந்திரிகா வழங்கினாராம்



கொழும்பு —

மேல்மாகாணசபை முதலமைச்சர் பதவியிலிருந்து றெஜினோல்ட் கூரேயை விலகுமாறு ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் பதவியிலிருந்து றெஜினோல்ட் கூரே விலகியதும், அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படும். இதற்காக நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள சட்டத்தரணி விஜயதாசா ராஜபக்ஷ அந்தப் பதவியிலிருந்து விலகிக்கொள்வார்.

நாடாளுமன்ற உறுப்பினராக றெஜி னோல்ட் கூரே நியமிக்கப்பட்ட பின்னர் அவருக்கு அமைச்சர் பதவி வழங்க ஜனாதிபதி தயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

## புத்தளத்தில் கைதான

# கருணாவின் சகாக்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு —

கருணாவின் சகாக்கள் எனக் கருதப்படும் - ஆயுதங்களுடன் புத்தளத்தில் கைதுசெய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க புத்தளம் நீதிவான் உத்தர விட்டார்.

நீர்கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு கருணா குழு உறுப்பினர்களையும் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லும்போது அவர்களை வழிமறித்து கடத்துவதற்கு புலிகள் திட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து அவர்களுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக பாதுகாப்பு வழங்கினர்.

அவர்கள் புத்தளம் நீதி மன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது புத்தளம் மாவட்ட நீதிபதி அமால் திலகரட்ண இவர்களை பிணையை வழங்க மறுத்து ஜூன் 17 ஆம் திகதிவரை தடுத்துவைக்கும்படி உத்தரவிட்டார்.

சாலியவெல பகுதியில் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து இந்த நான்கு தமிழ் இளைஞர்களும் ஒரு பிஸ்டல் மற்றும் 15 தோட்டாக்களுடன் பிரயாணம் செய்துகொண்டி ருந்தபோது பொலிஸார் கைதுசெய்தனர்.

நீலமேகன் நிமலன், சண்முகநாதன் நாதவிலான், செல்வராஜ் குமார் மற்றும் சண்முகநாத் நேசதுரை ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

# கா.பொ.த உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது!

கொழும்பு —

2005 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டப் படி பிரகாரம் இன்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜேசிறி தெரிவித்தார்.

பரீட்சையை நடத்தி முடிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் ஏற்கனவே தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

பரீட்சை நடவடிக்கைகளின்போது ஆள்மாறாட்டம் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் பரீட்சார்த்திகளுக்கு எதிராகவும் தமது கடமையை துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகளுக்கெதிராகவும் இம்முறை கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 2 லட்சத்து 44 ஆயிரத்து 459 பேர் தோற்றுகின்றனர். இவர்களில் 1 லட்சத்து 96 ஆயிரத்து 593 பாடசாலை மாணவர்களும், 47 ஆயிரத்து 866 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

# கண்ணிவெடிகள் அகற்ற புதிய ரோபோ இயந்திரம்!

## பேராதனை மாணவர்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு —

கண்ணிவெடிகளை கண்டுபிடித்து அகற்றும் ரோபோ இயந்திரமொன்றை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவு மாணவர்கள் தயாரித்துள்ளனர். கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடங்களை இனங்கண்டு துல்லியமாக வெளிப்படுத்தும் திறமை வாய்ந்த மிகவும் நுணுக்கமான இயந்திரங்கள் இந்த ரோபோவில் பொருத்தப்பட்டுள்ளன.

இத்தகைய ரோபோ இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் செலவுகளை விட மிகக்குறைந்த செலவில் உள்ளூரில் இவற்றைத் தயாரிக்க முடியுமென மொறட்டுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கிரிசாந்த நாணயக்கார தெரிவித்தார்.